பக்கங்கள்: 12 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 ஆடி 31 திங்கட்கிழமை 16.08.2021 கதிர் 284

### இது ரகசியம் அல்ல!

நேற்றைய ஆங்கில வார வெளியீடு ஒன்று தமிழர்களின் சாதனை பற்றிய ஒரு செய்தியை வெளியிட்டிருக்கின்றது.

அதன்படி இலங்கையின் நாடாளுமன்ற வரலாற்றில் ஆகக் கூடிய வயதில் எம்.பியாகப் பணியாற்றும்

பக்கம்02

# இலங்கையில் மீண்டும் இரவு ஊரடங்கு அமுல்!

## இன்று முதல் மறு அறிவித்தல் வரை



இலங்கையில் இன்று முதல் இரவு நேர தனிமைப்படுத்தல் ஊரடங்கு அமுல்படுத்தப்படவுள்ளது எனக் கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மத்திய நிலையத்தின் தலைவரும் இராணுவத்தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா அறிவித்துள்ளார்.

இதன்படி, மறு அறிவித்தல் வரை ஒவ்வொரு நாளும் இரவு 10 மணி முதல் அதிகாலை 4 மணி வரை தனிமைப்படுத்தல் ஊரடங்கு அமுலில்

2

# திருமண நிகழ்வுகளுக்கு நாளை தொடக்கம் தடை!

## மக்கள் ஒன்றுகூடவும் அனுமதி மறுப்பு

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்று அதிகரித்து வரும் நிலையில் அதனைக் கட்டுப்படுத்தும் வகையில் நாளை செவ்வாய்க்கிழமை நள்ளிரவு முதல் திருமண நிகழ்வுகளுக்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய நாளை 17ஆம் திகதி நள்ளிரவு முதல் வீடுகளிலும், மண்டபங்களிலும் திருமண நிகழ்வுகளை நடத்த அனுமதி வழங்கப்படமாட்டாது எனக் கொரோனாப் பரவலைத் தடுப்பதற்கான தேசிய செயற்பாட்டு மத்திய நிலையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா அறிவித்துள்ளார்.

அத்துடன், நேற்று

2

# கூட்டாட்சி அரசமைப்புக்கு இணங்கினாலேயே பேச்சு!

## விக்னேஸ்வரன் விதிக்கும் நிபந்தனை இது சுமந்திரனின் போக்கு சந்தேகத்துக்குரியதாம்

யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 16

ஒற்றையாட்சி அரசமைப்பை கைவிட்டு, கூட்டாட்சி அரசமைப்பை ஏற்படுத்த அரசு இணங்கினால் மட்டுமே அரசியல் தீர்வு குறித்து அரசுடன் பேச்சு நடத்துவதற்கு தமிழ் தலைவர்கள் போக வேண்டும்.

– இவ்வாறு பேச்சுக்கு முன் நிபந்தனை விதித்திருக்கிறார் முன்னாள் வடக்கு மாகாண முதலமைச்சரும், தற்போதைய யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரன்.

சுமந்திரன் எம்.பியின் செயற்பாடுகள் சந்தேகத்துக்குரியவையாக இருக்கின்றன என்றும் அவர் விசனம் தெரிவித்திருக்கின்றார்.

2

# வவுனியாவில் 50 பேருக்கு கொரோனா

(வவுனியா நிருபர்)

வவுனியாவில் மேலும் 50 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது எனச் சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

வவுனியாவில் இனங்காணப்பட்ட கொரோனாத் தொற்றாளர்களுடன் தொடர்புகளைப் பேணியோர், வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டோர் மற்றும் எழுமாறாக மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையின் முடிவுகள் சில நேற்று வெளியாகின.

அதில், கூடுவெந்தபுலவு பகுதியில் இருவருக்கும், உளுக்குளம் பகுதியில் இருவருக்கும், சமயபுரம் பகுதியில் ஒருவருக்கும், ஈரப்பெரியகுளம் பகுதியில் மூன்று பேருக்கும், தேக்கவத்தை பகுதியில் நான்கு

2

# 12 வயதுக்கு மேற்பட்ட சிறுவருக்கும் தடுப்பூசி

## பிரதமர் மஹிந்த அறிவிப்பு



நாட்டில் 12 வயதுக்கு மேற்பட்ட சிறுவர்களுக்கும் கொரோனாத் தடுப்பூசி செலுத்துவதற்கு அரசு திட்டங்களை மேற்கொண்டுள்ளது.

– இவ்வாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

அம்பாந்தோட்டை வைத்தியசாலையில்

2

# ஒரே நாளில் மேலும் 161 பேரை சாகடித்த கொடிய கொரோனா!

## 6 ஆயிரத்தைத் தாண்டியது மொத்த மரண எண்ணிக்கை

இலங்கையில் மேலும் 161 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் நேற்று முன்தினம் சாவடைந்துள்ளனர். இதுவே இது வரை ஒரே நாளில் பதிவான அதிகூடிய கொரோனா மரண எண்ணிக்கையாகும்.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் உறுதிப்படுத்தலுடன் அரச தகவல் திணைக்களத்தால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில்

2



# நேற்று 3,435 பேருக்கு தொற்று

இலங்கையில் நேற்று 3 ஆயிரத்து 435 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இதற்கமைய நாட்டில் இது வரை அடையாளம் காணப்பட்ட கொரோனாத்

10

# பாழடைந்த கிணற்றுக்குள் பாயில் சுற்றிய நிலையில் ஆணின் சடலம்

## கிளிநொச்சி பொலிஸார் தீவிர விசாரணை

(ந.லோகதயாளன்)

கிளிநொச்சி, இரத்தினபுரம் பகுதியில் பாழடைந்த கிணறு ஒன்றுக்குள் பாயில் சுற்றிய நிலையில் ஆணின் சடலம் ஒன்று நேற்று மீட்கப்பட்டுள்ளது.

சந்தேகத்துக்கிடமான முறையில் சடலம் காணப்படுவதால் குறித்த நபர் கொலை செய்யப்பட்டிருக்கலாம்

10



# யாழ். குடாநாட்டில் நேற்று 70 பேருக்குக் கொரோனா

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் நேற்று 70 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அதற்கமைய தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 26 பேருக்கும், வேலணை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 14 பேருக்கும், யாழ். போதனா வைத்தியசாலையில் 13 பேருக்கும், சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் 07

2

# திருத்தலங்களுக்கு தலா 10 லட்சம் ரூபா

## பிரதமரிடமிருந்து பெற்று வழங்கினார் டக்ளஸ்

(ந.லோகதயாளன்)

வரலாற்றுச் சிறப்புமிக்க திருத்தலங்களான கீரிமலை நகுலேஸ்வரர் தேவஸ்தானம் மற்றும் மாவிட்டபுரம் கந்தசாமி கோயில்

10



## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பெருமையைப் பெறவிருக்கின்றார் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன். இப்போது அவருக்கு வயது 88. வரும் பெப்ரவரி 5ஆம் திகதி 89 வயதை எட்டும் போது இலங்கையில் அதிகூடிய வயதில் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த பெருமை அவரை எட்டும்.

தற்போதைய நாடாளுமன்றத்தில் வயதில் மூத்த எம்.பியும் தமிழர்தான். வயதில் குறைந்த எம்.பியும் தமிழர்தான்.

வயதில் மூத்தவர் சம்பந்தன். வயதில் குறைந்தவர் ஜீவன் தொண்டமான். அவர் 25 வயதில் நாடாளுமன்றத்தில் புகுந்தார்.

தற்போதைய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும் தமது 24ஆவது வயதில் பெலியத்த எம்.பியாக 1970இல் தெரிவு செய்யப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

★ ★ ★

அம்புலன்ஸ் விமானம் ஒன்று நேற்றுக் காலை கொழும்புக்கு வந்து இறங்கி தரித்து பின்னர் புறப்பட்டுச் சென்றதை அடுத்து அதனை ஒட்டி பல வதந்திகள் தலைநகரில் கொடி கட்டிப் பறந்தன.

ஒரு முக்கிய வி.வி.ஐ.பி. பிரமுகர் இந்த அம்புலன்ஸ் விமானத்தில் சிகிச்சைக்காக சிங்கப்பூர் கொண்டு செல்லப்பட்டார் என்று தெரிவித்து பல ஊகங்கள் இறக்கை கட்டிப் பறக்கத் தொடங்கின.

ஒரு தரப்பு, யு.எஸ்.எயிட் அமைப்பின் தலைவர் சமந்தா பவரின் ஏற்பாட்டில், முன்னாள் நிதி மற்றும் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர இந்த விமானத்தில் சிகிச்சைக்காக ஏற்றிச் செல்லப்பட்டார் என்று தகவல் வெளியிட்டது. ஆனால் மங்கள சமரவீரவுக்கு நெருக்கமான வட்டாரங்களோ அவர் கொழும்பு தனியார் வைத்தியசாலை ஒன்றில் தங்கி சிகிச்சை பெற்றுக் கொண்டிருக்கின்றார் என்று அடித்துக் கூறின.

இன்னொரு தரப்பு, நாட்டின் அதிகாரத்தை வைத்துள்ள குடும்பத்தின் முக்கிய நபர் ஒருவர் சிகிச்சைக்காக அதில் பறந்தார் என்றது.

ஆனால் 'செக்' பண்ணிப் பார்த்ததில் அந்தத் தகவல் எல்லாம் வெறும் 'வதந்தீ' எனத் தெரிய வந்தது.

ஜேர்மனைச் சேர்ந்த பிரபுக்கள் குடும்பப் பிரமுகர் ஒருவரைச் சிகிச்சைக்காக அழைத்துச் செல்லும் ஏற்பாட்டிலேயே அந்த அம்புலன்ஸ் விமானம் வந்து சென்றது.

ஆனால் சிங்கப்பூரில் இருந்து புறப்பட்ட அந்த அம்புலன்ஸ் கொழும்பு வருவதற்கு முன்னர் அந்தக் கோடீஸ்வரர் வேறு மார்க்கத்தில் நாட்டை விட்டுப் புறப்பட்டு விட்டார் என்று கூறப்பட்டது.

அதனால், அம்புலன்ஸ் விமானம் வெறுமனே வந்து திரும்பியிருக்கின்றது. அவ்வளவுதான்...!

★ ★ ★

கொரேனாத் தொற்றுப் பரவல் தொடர்பாக அரசு வெளியிடும் புள்ளிவிவரம் வெறும் சுத்துமாத்து என ஜே.வி.பி. தொடர்ந்து குற்றம் சுமத்தி வருகின்றது. இந்த நிலையில் 'சண்டே ரைம்ஸ்' ஒரு தகவலை வெளியிட்டிருக்கின்றது.

கடந்த 12ஆம் திகதி காலை 6 மணி வரையான 24 மணி நேரத்தில் கம்பஹா மாவட்டத்தில் அடையாளம் காணப்பட்ட தொற்றாளர் எண்ணிக்கை ஆக இரண்டு இலக்கங்களில் – 35 மட்டுமே – என அரசின் உத்தியோகபூர்வ புள்ளிவிவரம் தெரிவித்தது. ஆனால் உண்மையான எண்ணிக்கை நான்கு இலக்கத்தில் அமைந்தது என அந்தப் பத்திரிகை உறுதிப்படுத்தியது. அதற்கான ஆதாரம் தன்னிடம் இருப்பதாகவும் அது கூறுகின்றது.

நான்கு இலக்கம் என்றால் ஆகக்குறைந்தது ஆயிரமாகும். அது உண்மையில் இரண்டாயிரத்துக்கும் அதிகம் என்று கூறப்படுகின்றது.

இரண்டாயிரத்துக்கும் அதிகமானோர் தொற்றுக்குள்ளானமையைத்தான் வெறும் 35 என்று அரசு கணக்குக் காட்டுகின்றதா?

கொவிட் தொற்றுப் பரம்பல் பற்றிய செய்தி விடயத்தில் நாட்டு மக்கள் தலையில் மிளகாய் அரைக்கப்படுகின்றது, காதில் பூச் சுற்றப்படுகின்றது என்பது மட்டும் உறுதி.

பாவம் மக்கள்..!

– மின்னல் –

## இலங்கையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இருக்கும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

எனினும், அத்தியாவசிய சேவைகளில் ஈடுபடுபவர்களுக்கு ஊரடங்கின்போது விலக்களிக்கப்பட்டுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்தோடு இந்தக் காலப்பகுதியில் பொதுமக்களின் நடமாட்டம் கண்டிப்பாகத் தடை செய்யப்பட்டுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

---

## 12 வயதுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நிறுவப்பட்டுள்ள சிறுவர்களுக்கான கொரோனா சிகிச்சை நிலையத்தை நேற்றுக் காணொலி ஊடாகத் திறந்துவைத்து உரையாற்றும்போது அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இந்தத் திட்டத்தின்போது ஏற்கனவே நோய் நிலைமைகளை உடைய சிறுவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படவுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார்.

சிறுவர்களைப் பாதுகாப்பதற்கு அரசு மிகுந்த கரிசனையுடன் செயற்பட்டு வருகின்றது எனவும், இதற்காகப் பல திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன எனவும் பிரதமர் தனது உரையில் தெரிவித்தார்.

கொரோனாத் தொற்றுக்குள்ளான சிறுவர்களுக்கு முதலாவது சிகிச்சை நிலையம் தென் மாகாணத்தில் அம்பாந்தோட்டை வைத்தியசாலையில் நிறுவப்பட்டுள்ளதைச் சுட்டிக்காட்டிய பிரதமர், ஏனைய மாகாணங்களிலும் இது போன்ற சிகிச்சை நிலையங்கள் நிறுவப்படவுள்ளன எனவும் உறுதியளித்தார்.

---

## வவுனியாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பேருக்கும், புளியங்குளம் பகுதியில் இருவருக்கும், நொச்சிமோட்டைப் பகுதியில் ஒருவருக்கும், ஓமந்தை பகுதியில் மூன்று பேருக்கும், டொன்பொஸ்கோ சிறுவர் இல்லத்தில் இருவருக்கும், கற்குழி பகுதியில் ஒருவருக்கும், வைரவபுளியங்குளம் பகுதியில் ஒருவருக்கும், மகாறம்பைக்குளம் பகுதியில் இரண்டு பேருக்கும், ஆனைவிழுந்தான் பகுதியில் மூன்று பேருக்கும், சிப்பிக்குளம் பகுதியில் நான்கு பேருக்கும் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அதேவேளை, இறம்பைக்குளம் பகுதியில் இரண்டு பேருக்கும், குடாகச்சகொடி பகுதியில் ஒருவருக்கும், ஒலுமடு பகுதியில் ஒருவருக்கும், கூமாங்குளம் பகுதியில் இருவருக்கும், பட்டானிச்சூர் பகுதியில் ஒருவருக்கும், ஓமந்தை இராணுவ முகாமில் ஒருவருக்கும், போகஸ்வேவ பகுதியில் ஒருவருக்கும், மதவாச்சி பகுதியில் ஒருவருக்கும், பூம்புகார் பகுதியில் ஒருவருக்கும், நேரியகுளம் பகுதியில் இரண்டு பேருக்கும், செட்டிகுளம் வைத்தியசாலையில் ஒருவருக்கும், வேலன்குளம் பகுதியில் ஒருவருக்கும், செட்டிகுளம் பகுதியில் ஒருவருக்கும், ஹொரவப்பொத்தானை பகுதியில் ஒருவருக்கும், செக்கட்டிப்புலவு பகுதியில் இருவருக்கும் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில், தொற்றாளர்களைக் கொரோனா சிகிச்சை நிலையத்துக்கு அனுப்பிவைப்பதற்கும், அவர்களுடன் தொடர்புடையவர்களைச் சுயதனிமைப்படுத்துவதற்கும் சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர். (100)

---

## ஒரே நாளில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்தச் சாவுகள் தொடர்பான விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

இதற்கமைய நாட்டில் பதிவான கொரோனா மரணங்களின் மொத்த எண்ணிக்கை 6 ஆயிரத்து 96 ஆக அதிகரித்துள்ளது.

நேற்றுமுன்தினம் உயிரிழந்த 161 பேரில் 83 ஆண்களும், 78 பெண்களும் உள்ளடங்குகின்ற னர்.

இதில் ஒரு பெண் 30 வயதுக்குட்பட்டவர். 22 ஆண்கள், 16 பெண்கள் என 38 பேர் 30 – 59 வயதுக்கு இடைப்பட்டவர்களாவர். 122 பேர் 60 வயதுக்கு மேற்பட்டவர்களாவர். இதில் 61 ஆண்களும், 61 பெண்களும் அடங்குகின்றனர்.

## கூட்டாட்சி அரசமைப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நேற்றுத் தாம் அனுப்பி வைத்த செய்தியாளர் கேள்வி – பதில் பற்றிய அறிக்கையிலேயே இந்த விடயத்தை அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

"தமிழர்கள் சார்பில் அரசாங்கத்தோடு சுமந்திரன் எம்.பி. பேச்சுக்களை ஆரம்பித்திருக்கிறார். இதை நீங்கள் எப்படி பார்க்கிறீர்கள்?" – என்ற அடிப்படையில் அந்த கேள்வி அமைந்திருந்தது. அதற்கு தம்முடைய பிரதிபலிப்பு யாது என்பதை நீதியரசர் விக்னேஸ்வரன் அறிக்கையாக அனுப்பி உள்ளார். அதில் அவர் குறிப்பிட்டுள்ளவை வருமாறு:–

இலங்கை அரசுக்கு எதிரான சர்வதேச அழுத்தம் அதிகரித்து வருகின்றது. ஆகையினால் தமிழர்களுடன் நல்லிணக்க முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று காட்டவேண்டிய நெருக்கடி அரசுக்கு ஏற்பட்டுள்ளது. உண்மையில், தமிழர்களோடு நல்லிணக்க முயற்சியை ஆரம்பிக்க வேண்டும் என்ற எண்ணம் அரசுக்கு இருக்குமானால் அது நல்ல செய்தி. அதை நாம் வரவேற்கின்றோம்.

ஆனால் அரசாங்கம் தமிழர்களிடமிருந்து ஏமாற்றித் தான் அபகரித்துக் கொண்ட ஒற்றையாட்சி அரசமைப்பை விட்டுக் கொடுப்பதற்கு வெளிப்படையாக ஒப்புக் கொள்ளாதவரை அந்த அரசாங்கத்துடன் எந்தப் பேச்சுவார்த்தையைத் தொடங்குவதும் பயனற்றது என்பதுதான் கடந்த கால அனுபவத்தில் நாம் பெற்ற பட்டறிவு ஆகும். ஒற்றையாட்சி அரசமைப்பை இலங்கைக்கு வழங்கியதற்காக சோல்பரி பிரபு கூட பிற்காலத்தில் கவலைப்பட்டார்.

இந்த நாட்டில் ஒற்றையாட்சி அரசமைப்பு நீடிக்கும் வரை – நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை இருக்கும் வரை – திருப்திகரமான தீர்வு ஒன்று எட்டப்படும் என்று நாங்கள் நம்பவில்லை. கூட்டாட்சி அரசமைப்பு ஒன்றுதான் இந்த நாட்டில் தமிழர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் என்று நாங்கள் கருதுகிறோம். கூட்டாட்சி அரசமைப்பு ஒன்றுக்கு அரசு இணங்குமானால் அதனடிப்படையில், எண்ணிக்கை அடிப்படையில் பலவீனமான தமிழர்களின் உரிமைகளைப் பாதுகாப்பது குறித்து அரசாங்கத்தோடு தமிழ் தலைவர்கள் சேர்ந்து அது பற்றி பேசலாம். ஒற்றையாட்சி அரசமைப்பு கைவிடப்படும் என்ற உறுதிமொழியை பெறாமல் எந்த தமிழ் அரசியல் தலைவரும் அரசாங்கத்தோடு பேசத் தொடங்குவாராயின் அவர் தமிழ் மக்களையும், சர்வதேச சமூகத்தையும் ஏமாற்றுகிறார் என்பதோடு, அவர், தமிழ் மக்களின் துரோகி எனத் தமிழ் மக்களால் கருதவும் படுவார்.

நல்லிணக்கத்துக்கு அல்லது தீர்வுக்கான எந்த முயற்சியும் தமிழ் மக்களின் நீண்டகாலப் பாதுகாப்பை மனதில் கொண்டதாக இருக்க வேண்டும். சிங்களப் பேரினவாதத்தினால் படுகாயமுற்றுக் கிடக்கும் தமிழர்கள் நாங்கள்.

ஆகவே எந்த அரசியல் தீர்வும் தமிழர்களின் அடிப்படைப் பிரச்சினைகளான அவர்களின் பாதுகாப்பு, அவர்களின் மொழி மற்றும் தாயகத்தின் தனித்துவம், இருப்பு ஆகியவை பேணப்பட்டு உறுதிப்படுத்துவதாக இருக்க வேண்டும்.

எது, எப்படி என்றாலும் சுமந்திரனும் அவரது கட்சியும் மாத்திரம் தமிழர்களின் பிரதிநிதிகள் அல்லர். இன்னும் மோசம் என்னவென்றால் சுமந்திரன் தன்னுடைய கூட்டமைப்பின் மற்றைய தலைவர்களின் நம்பிக்கையைக் கூடப் பெற்றவர் அல்லர். ஆகவே, தானேதான் தமிழர்களுடைய தனிப் பிரதிநிதி என சுமந்திரன் தன்னை முன்னிலைப்படுத்த முயலக் கூடாது.

அவர் தன்னுடைய இலக்கு, நோக்கம் குறித்தோ, அரசாங்கத்தினுடைய கருத்து யாது என்பது பற்றியோ எதுவும் யாருடனும் பேசவில்லை. இந்தப் பின்புலத்தில் அவருடைய நிலைப்பாடு சந்தேகத்திற்குரியதாகிறது. தமிழர்களுக்கு எது நல்லது என்று சுமந்திரன் கருதுவது அல்ல விடயம், சுமந்திரனுக்கும் அப்பால் தமிழர்கள் தங்களுக்கு நல்லது எது என அவர்கள் கருதுகிறார்களோ, அதுதான் கருத்தில் எடுக்கப்பட வேண்டியது ஆகும்.

நல்லாட்சியின் கடைசி காலத்தில் கூட சுமந்திரன் தன்னுடைய தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளுக்கு ஏற்ப, தன்னிச்சையாகச் செயல்பட்டு, தமிழ் மக்களுக்குப் பாரிய பின்னடைவை ஏற்படுத்தினார் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. அவர் தம்முடைய தனிப்பட்ட விருப்புரிமைகளுக்கு அமைய ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் அப்போதைய அரசாங்கத்துக்கு ஆதரவாகச் செயல்பட்டு, தமிழ் மக்களுக்கான நீதியை நாசப்படுத்தியமையை நாங்கள் மறந்துவிட முடியாது. அது போலவே இப்போதும் தமிழ் மக்களின் எதிர்காலம் குறித்து தன்னுடைய சுய விருப்பத்தின் அடிப்படையில் அவர் விளையாட முயற்சிக்கிறார். உண்மையில் தன்னுடைய தமிழ் மக்களின் நலனில் அவருக்கு அக்கறை இருக்குமானால், அவர் குறைந்தபட்சம் தன்னுடைய கட்சி உறுப்பினர்களுடனும் ஏனைய கட்சிகளுடனுமாவது பேசுவார். தமிழ் மக்களை இன்னும் ஆழமான சேற்றில் தத்தளிக்க அவர் இழுத்து விட மாட்டார் என்று நான் நம்புகிறேன்.

இலங்கை அரசாங்கம் தான் உருவாக்கிய கற்றுக்கொண்ட பாடங்கள் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் 2012 இல் தனக்குப் பரிந்துரைக்கப்பட்ட கடப்பாடுகளை இன்னும் நிறைவு செய்ய வில்லை. இந்தப் பின்புலத்தில் தொடர்ந்து வரும் அரசுகளின் நோக்கம் என்ன என்பதை ஊகிப்பது அவ்வளவு ஒன்றும் கஷ்டமானது அல்ல.

எந்த இலங்கை அரசும் தமிழர்களுக்கு நீதியான தீர்வைத் தரப்போவதில்லை. அவர்கள் ஒற்றையாட்சி அரசமைப்பின் கீழ் தமிழர்களை தங்கள் அதிகாரத்தின் கீழ் கட்டுப்படுத்தி ஆளுவதையே நோக்காகக் கொண்டவர்கள். யுத்தம் முடிந்தும் இராணுவம் வடக்கு கிழக்கில் கடந்த 12 வருடங்களாக இருப்பது அதனால்தான்.

இலங்கையில் மனித உரிமைகள் நிலைமை மேம்படுத்தப்பட வேண்டும், அங்குள்ள நிலைமை உன்னிப்பாகக் கண்காணிக்கப்பட்டு அறிக்கையிடப்பட வேண்டும் என்று ஐ.நா. வலியுறுத்தி நிற்கின்றது. ஐ.நாவின் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அடுத்த கூட்டத் தொடர் செப்டம்பரில் வருகின்றது. இந்தச் சமயத்தில் இலங்கை அரசாங்கத்தின் பொறிக்குள் பலியாடாக விழாமல், நாங்கள் உறுதியோடு நிமிர்ந்து நிற்க வேண்டும். அரசியல்வாதிகளின் இணைப்போடு கூட்டாட்சி அரசமைப்பை வலியுறுத்துவதற்கான ஒரு திட்டத்தை எங்களுடைய நிபுணர்கள் தயாரித்துச் செயற்படுத்த வேண்டிய காலம் இது. – என்று தெரிவித்துள்ளார்.

---

## யாழ்.குடாநாட்டில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பேருக்கும், கோப்பாய் பிரதேச வைத்தியசாலையில் 09 பேருக்கும், நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் ஒருவருக்கும் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

---

## திருமண நிகழ்வு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நள்ளிரவு முதல் மறு அறிவித்தல் வரை எந்தச் சந்தர்ப்பத்திலும் பொதுமக்கள் ஒன்றுகூட அனுமதி வழங்கப்படமாட்டாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கொரோனாப் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கான மற்றுமொரு நடவடிக்கையாக இந்தத் தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, உணவகங்களில் ஒரு சந்தர்ப்பத்தில் அதன் கொள்ளளவில், 50 சதவீதமானோரை விடவும் அதிகமானோருக்கு ஒன்றுகூட முடியாது எனவும் அவர் கூறியுள்ளார்.

பொது இடங்களில் நடமாடுவதை இயன்றளவு தவிர்க்குமாறும் பொதுமக்களிடம் அரசு கோருகின்றது எனவும் இராணுவத் தளபதி மேலும் தெரிவித்துள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir

# இரண்டு வயதுக்கு மேற்பட்ட குழந்தைகளுக்கு முகக்கவசம் அணிவதால் எந்தப் பாதிப்புமில்லை!

## குழந்தை வைத்திய நிபுணர் அருள்மொழி தெரிவிப்பு

இரண்டு வயதுக்கு மேற்பட்ட குழந்தைகளுக்கு முகக்கவசம் அணிவதால் எந்தப் பிரச்சினையும் இல்லையென குழந்தைகள் வைத்திய நிபுணர் கே.அருள்மொழி தெரிவித்தார்.

யாழ்ப்பாண மருத்துவ சங்கத்தினுடைய ஏற்பாட்டில் நடைபெற்ற கொரோனா தொடர்பான விழிப்புணர்வு ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்

குழந்தைகளையும் கொரோனா தாக்கும் என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். உலகளாவிய ரீதியில் கொரோனா கூடிக்கொண்டே செல்கின்றது. குறிப்பாக பெப்ரவரி மாதத்துக்குப் பின்னர் இலங்கையிலும் யாழ்ப்பாணத்திலும் குழந்தைகளைத் தொற்றும் வீதம் அதிகரித்திருக்கின்றது.

குழந்தைகளுக்கு வரும் என்பது நிச்சயம் குழந்தைகளுக்கு கூறப்படுவதை மூன்று வகையாக கூறமுடியும் முதலாவது சாதாரணமாக தாக்கப்படுதல் அதன் அறிகுறிகள் தெரியாது அல்லது அறிகுறிகள் மிகக் குறைந்த அளவில் காணப்படும். இவ்வாறான கொரோனாவே அதிகளவில் குழந்தைகளுக்கு ஏற்படுகிறது .

இரண்டாவது தீவிரமாக குழந்தைகளைத் தாக்குதல். இது பெரியளவில் தென்னிலங்கையில் பேசப்படுகிறது. ஆனாலும் இங்கு பெரியளவில் இனங்காணப்படவில்லை. மூன்றாவது குழந்தைகளின் உடல் உறுப்புக்களை தாக்குவதாகும்.

குறிப்பாக பிள்ளைகள் சோர்வடைதல், சிறுநீரின் அளவு குறைதல், நீராகாரங்களை உண்ணாதிருத்தல், தொடர்ச்சியாக சத்தி எடுத்தல், மூச்சுவிட கஷ்டப்படுவது போன்ற பிரச்சினைகளை நீங்கள் உங்கள் பிள்ளைகளில் கண்டால் உடனடியாக வைத்தியசாலையை நாட வேண்டும். தாய்க்கு தன்னுடைய பிள்ளையின் செயற்பாட்டில் வித்தியாசம் தெரியுமாக இருந்தால் வைத்தியசாலைக்கு அழைத்து வருவது சிறப்பானது.

கை மருத்துவங்களைத் தவிர்த்தல் நல்லது. குழந்தைகளைத் தேவையற்ற இடங்களுக்குக் கூட்டிச் செல்வதைத் தவிர்க்க வேண்டும். கைகளைக் கழுவுவதற்குக் குழந்தைகளுக்கு உதவி செய்ய வேண்டும் . இரண்டு வயதுக்கு மேற்பட்ட குழந்தைகளுக்கு முகக்கவசம் அணிவதால் எந்தப் பிரச்சினையும் இல்லை. உணவருந்தும் போதும் நித்திரைகொள்ளும்போதும் முகக்கவசத்தை அணியத் தேவையில்லை. நாள்பட்ட நோயால் பாதிக்கப்பட்ட நோயாளிகள் வீட்டில் இருப்பார்கள் எனில் குழந்தைகள் வீட்டில் முகக்கவசத்தைப் போடுவது நல்லது. அவ்வாறில்லாவிடில் தேவையில்லை.

சிலர் குழந்தைகளுக்கு முகக் கண்ணாடி (பேஸ் சீல்ட்) அணிவிக்கிறார்கள். முகக்கண்ணாடி (பேஸ் சீல்ட்) முகக்கவசத்துக்கு மாற்றாக அமையாது. அதே வேளை முகக்கவசத்துக்கு மேலதிகமாக அதனை அணியமுடியும்.

மிக விரைவில் 18 வயதுக்கு மேற்பட்டவர்களுக்குத் தடுப்பூசி போடப்படப் போகின்றது. சில நாடுகளில் 12 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு தடுப்பூசிகள் போடப்படுகின்றன. சீனா போன்ற சில நாடுகளில் 3 வயதுக்கு மேற்பட்ட குழந்தைகளுக்குத் தடுப்பூசி போடும் செயற்பாடுகள் நடக்கின்றன. ஆனால் இலங்கையைப் பொறுத்தவரை குழந்தைகளுக்கு தடுப்பூசி போடுகின்ற எந்த முடிவும் இதுவரை எடுக்கப்படவில்லை. - என்றார்.

# கொரோனாவின் கொடூரத் தாண்டவம்; மகள் கண்முன்னே உயிரிழந்தார் தாய்

## வைரலாகும் வைத்தியரின் உருக்கமான பதிவு

அவிசாவளை மாவட்ட பொது வைத்தியசாலையின் வைத்தியர் ஒருவர் தமது வைத்தியசாலையில் நிலவும் கொவிட் நிலைமை மற்றும் நோயாளர்கள், உயிரிழப்பவர்கள் தொடர்பிலான பதிவொன்றை முகப்புத்தகத்தில் பதிவிட்டுள்ளார்.

மேற்படி பதிவானது தற்போது சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகின்றது.

அந்தப் பதிவில் வைத்தியர், அவிசாவளை மாவட்ட பொது வைத்தியசாலையில் ஆரம்பிக்கப்பட்ட நாளிலிருந்து நான் கொவிட் விடுதியில் பணியாற்றி வருகிறேன். நாம் 12 மருத்துவர்கள் கொவிட் விடுதிகளில் வேலை செய்கிறோம். இப்போது அவை நிரம்பிவிட்டன.

தினமும் 100 கொவிட் நோயாளர்கள் கதிரைகள் மற்றும் தரையில் சிகிச்சை பெறுகின்றனர். வேலை தொடர்பான மன அழுத்தம் பற்றி நான் கேள்விப்பட்டு படித்திருந்தாலும் அது உண்மையில் என்னவென்று இப்போது உணர்கிறேன்.

இதுவரை வந்த கொவிட் நோயாளர் எண்ணிக்கை, அவர்கள் சிரமப்படும் விதம், ஒட்சிசன் கொடுக்கப்பட வேண்டிய நோயாளிகளின் எண்ணிக்கை, சிரமப்படும் நோயாளிகளின் வயது இவை அனைத்தும் ஒரே வாரத்தில் மாறின.

அது ஒரு பெரிய வித்தியாசம். விடுதியில் சேர்க்கப்பட்ட நோயாளர் எண்ணிக்கை 3 மடங்கிலும் அதிகம். எழுபது, எண்பதுகளின் பெற்றோர்கள் முன்பு கொஞ்சம் கடினமாக இருந்தனர், இப்போது அது முப்பது மற்றும் நாற்பது வயதுடையவர்களுக்குக் கடினமாக உள்ளது.

இன்னும் இன்னும் ஒட்சிசன் விநியோக இயந்திரங்கள் உச்சபட்ச நிலையில் இயங்கினாலும் கூட மக்கள் இறக்கின்றனர் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

நாற்பது வயதுள்ள ஒரு தாய் தனது மகளுக்கு முன்பாக மூச்சுத்திணறலால் இறந்தார், சி.பி. ஏ.பி. இயந்திரம் பொருத்தப்பட்டு பேச முடியாத ஒரு மனைவி தன் கணவனைப் பிடித்தவாறு விடைபெற்றார்.

தனது மனைவி இரட்டைக்குழந்தையைப் பிரசவிக்க தயாராகிக் கொண்டிருந்த போது அவரது 27 வயது கணவன் தீவிர சிகிச்சை பிரிவுக்கு அனுப்பப்பட்டார். அவரால் எதுவும் செய்ய முடியவில்லை. இவை அனைத்தும் ஒரே நாளில் நடக்கும் போது நான் உணரும் கனம், கடினத்தன்மை, பிரச்சினை, அதிக வேலை. இந்தச் சுமை என் தலையில் உணரப்பட்டது.

அனைத்திலும் கடினமான பகுதி மக்கள் இறக்கும் போது, அவர்கள் கடினமாக மூச்சுவிடும் போது 'எம்மை நாம் காப்பாற்ற ஏதாவது செய்யப் போகிறோமா?'என்பதே. முன்பு ஓரிரு நாள்களில் இறப்புகள் தற்போது ஒரு வாரத்தில் ஒரு நாளில் 4, 5 ஆக மாறியுள்ளன.

இந்த வீதத்தில் இன்னும் இரண்டு வாரங்களுக்கு நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்தால், ஒட்சிசன் சிலிண்டர் இல்லாததால் மக்கள் கதிரைகளிலும், தரையிலும் முற்றத்திலும் இறந்து விடுவார்கள்.

முடிந்தவரை கவனமாக இருங்கள். மக்கள் ஈக்களைப் போல் இறக்கிறார்கள். கடந்த மாதம் 12 வைத்தியர்களில் ஒருவரும் 30 தாதிகளில் 10 பேரும் கொவிட்டால் பாதிக்கப்பட்டுள்ளனர் எனக் குறிப்பிட்டுள்ளார்.

# இரவு நேரங்களில் ஊரடங்குச் சட்டம் விசேட வர்த்தமானி இன்று வெளிவரும்

தற்போது மாகாணங்களுக்கிடையில் பயணத்தடையை விதித்துள்ள அரசாங்கம் இரவு நேர ஊரடங்குச் சட்டத்தையும் அமுல்படுத்த ஆராய்ந்து வருகின்றது.

இதன்படி இரவு 11 மணிமுதல் அதிகாலை 4 மணிவரை ஊரடங்குச் சட்டத்தை அமுல்படுத்துவதற்கும் அத்தியாவசிய சேவைகளுக்கு மாத்திரம் அந்த காலப்பகுதியில் விலக்களிக்கவும் அரச மேல் மட்டத்தில் ஆராயப்பட்டு வருகின்றது.

மேலும், இன்று வெளியிடப்படவுள்ள விசேட வர்த்தமானியில் இது தொடர்பில் மேலும் பல விடயங்கள் உள்ளடக்கப்படவுள்ளன.

# இலங்கையில் சினோபோர்ம் வழங்கும் முறை தவறாம்!

## எச்சரிக்கிறார் பேராசிரியர் ஜீவந்தர



இலங்கையில் கொவிட் தொற்றைத் தடுப்பதற்காக சினோபாம் தடுப்பூசி வழங்கும் முறை தவறானதென ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் சந்திம ஜீவந்தர தெரிவித்துள்ளார்.

சினோபோர்ம் தடுப்பூசியின் முதலாவது டோஸ் வழங்கிய பின்னர் 3 வாரத்தில் இரண்டாவது டோஸ் வழங்கப்பட வேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார். எனினும் இலங்கை மக்களுக்கு 4 வாரங்களின் பின்னரே இரண்டாவது டோஸ் வழங்குவதற்கு சுகாதார அமைச்சு நடவடிக்கை மேற்கொண்டிருப்பது மிகப்பெரிய பிரச்சினையாகும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

3 வாரத்தில் இரண்டாவது தடுப்பூசி வழங்கினால் 4 வாரத்தில் கொவிட் தொற்றுக்கு எதிராக நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கின்றது. எனினும் மேலும் ஒரு வாரம் தாமதமாக வழங்குவதால் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கத் தாமதமடைகின்றது.

இது மக்களுக்கு இழைக்கப்படும் அநீதியாகும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். சினோபோர்ம் தடுப்பூசி வழங்கும் போது இரண்டாவது தடுப்பூசியை 3 வாரங்களில் வழங்குமாறு தான் கடந்த மே மாதம் முதல் அறிவித்த போதிலும் சுகாதார அமைச்சு அதனை ஏற்றுக் கொள்ளவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

டெல்டா வைரஸ் நாட்டினுள் வேகமாகப் பரவும் சந்தர்ப்பத்தில், இலங்கைக்கு பாரிய அளவு தடுப்பூசி கிடைக்கும் போதிலும் மக்களுக்கு அதனை உடனடியாக வழங்காமல் இருப்பது குழப்பமான விடயமாக உள்ளதென அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# லயன் மகாதேவா – லயன் பூமாதேவி ஞாபகார்த்தமாக சுன்னாகம் லயன்ஸ் கழகத்தால் உலருணவு வழங்கல்

சுன்னாகம் லயன்ஸ் கழகத்தின் முன்னோடிகளாகிய லயன் மகாதேவா - லயன் பூமாதேவி தம்பதிகளின் ஞாபகார்த்தமாக இணுவில் பகுதியிலுள்ள வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட குடும்பங்களுக்கு சுன்னாகம் லயன்ஸ் கழகத்தால் அண்மையில் உலருணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

சுன்னாகம் லயன்ஸ் கழகத்தின் புதிய நிர்வாகப் பதவியேற்பு விழா கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது. இந்த நிகழ்வில் வைத்து, சுன்னாகம் லயன்ஸ் கழக உறுப்பினரும் லண்டனில் வசிப்பவருமாகிய சமூகசேவகர் லயன் ம.பிரிதுவிராஜ், தனது பெற்றோர்களாகிய அமரர்களான லயன் செ.மகாதேவா - லயன் ம.பூமாதேவி ஞாபகார்த்தமாக இந்த உலருணவுப் பொதிகளை வழங்குவதற்கு ஒழுங்கமைத்தார்.

சுன்னாகம் லயன்ஸ் கழக முன்னாள் தலைவர் லயன் பா.மரியதாஸ், புதிய தலைவர் லயன் செல்வராகினி ஆகியோர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் லயன்ஸ் கழகங்களின் 2 ஆவது உப மாவட்ட ஆளுநர் லயன் பிளஸிடஸ் பீற்றர் - லயன் சாவித்திரி தம்பதியர் பிரதமவிருந்தினராகக் கலந்து இந்த உலருணவுப் பொதிகளை வழங்கி வைத்தனர்.



காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## நீதித்துறை மீது தலையீடு

கொவிட் தொற்றுப் பேரிடர் தொடர்பான விடயங்களை ஒட்டி இப் பத்தியில் கடந்த ஒன்றரை வருடங்களாக ஒரு விடயத்தைத் திரும்பத் திரும்பச் சுட்டிக்காட்டி வருகின்றோம்.

அதனை ஜனாதிபதி சட்டத்தரணியும், இன்று இலங்கையில் சட்டத்துறை விற்பன்னராக மதிக்கப்படுகின்றவருமான எம்.ஏ.சுமந்திரன் எம்.பியும் நாடாளுமன்றத்தில் திரும்பத் திரும்பச் சுட்டிக் காட்டி வருகின்றார்.

ஆனால் அதற்கு அரசு பதிலளிக்காமலேயே – உரிய பிரதிபலிப்பைக் காட்டாமலேயே – தன் கைவரிசையைத் தொடருகின்றது.

அது – கொரோனப் பேரிடரைக் கட்டுப்படுத்துதல் என்ற பெயரில் பல விதிமுறைகளை, கட்டுப்பாடுகளை, நடவடிக்கைகளை, மட்டுப்படுத்தல்களை அரசு விதிக்கின்றது. ஆனால் அவை எவையும் சட்டரீதியானவை அல்ல. சட்டத்தால் செய்ய வேண்டிய – நிறைவேற்ற வேண்டிய – நடவடிக்கைகளை சட்டமில்லாமல், அராஜகப் போக்கில் அரசு முன்னெடுக்கின்றது என்பதுதான் இதன் அர்த்தம்.

கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்துதல் என்ற பெயரில் சட்டத்தின் ஆட்சி இல்லாத நடைமுறையை முன்னெடுக்கின்றது அரசு.

சரியோ, பிழையோ கொரோனாத் தொற்று ஒரு தேசியப் பேரிடர். அதை எதிர்கொண்டு, அதற்கு முகம் கொடுத்து, அந்தச் சவாலை சமாளிப்பதாயின், அரசு காட்டும் – வழி நடத்தும் – விதிமுறைகளுக்கு நாட்டு மக்கள் எல்லோரும் அமைந்து, கட்டுப்பட்டு, அவற்றைப் பின்பற்றி நடப்பது பொறுப்புடைய பிரஜை ஒருவரின் கடமையாகும்.

இந்தப் பொறுப்புக் காரணமாக, அரசு விதிக்கும் கட்டுப்பாடுகள், விதிமுறைகள் சட்ட ரீதியானவையா என்ற கேள்வி, நியாயங்களுக்கு உட்படுத்தாமல் மக்கள் அவற்றைப் பின்பற்றி நடக்கின்றார்கள்.

மக்களின் இந்தப் பொறுப்புணர்வை, சட்டம் இல்லாமல் – நீதி முறைமைகள் இல்லாமல் – தான்தோன்றித்தனமாக – தான் முன்னெடுக்கும் ஆட்சிப் போக்குக்குச் சாதகமாகப் பயன்படுத்தி வருகின்றது கோட்டா அரசு.

ஒன்றரை வருடங்களாகியும், கொரோனாத் தொற்றுக் கட்டுப்பாட்டு விதிகளை நடைமுறைப்படுத்துவதற்கான சட்ட மூலம் எதையும் நாடாளுமன்றத்தில் அரசு நிறைவேற்றவில்லை. ஊரடங்கு விதித்தல், முடக்கம், மாகாணங்களுக்கு இடையிலான போக்குவரத்துத் தடை போன்ற நடவடிக்கைகளை பொதுஜனப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் அவசர காலநிலையைக் கூடப் பிரகடனப்படுத்தாமல் அரசு முன்னெடுக்கின்றது.

அவ்வப்போது வர்த்தமானி அறிவித்தல்கள் விடுக்கப்பட்டாலும், இந்த விதிமுறைகள், அரசு விதிக்கும் கட்டுப்பாடுகள் எல்லாம் சட்ட அங்கீகாரம் ஏதும் இல்லாமல் அதிகாரத் தரப்பால் முன்னெடுக்கப்படும் சட்ட மீறல் நடவடிக்கைகள்தான். அராஜகங்கள் தாம். இதனை இலங்கையின் மனித உரிமைகள் ஆணைக்குழுவும் கூட ஒப்புக் கொண்டு அரசுக்கு எழுத்தில் சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த அத்து மீறலின் அடுத்த கட்டம் நேரடியாக நீதித்துறை மீதான பாய்ச்சலாக அமைகின்றது. ஆட்சித் தத்துவம் நீதித்துறையை ஆக்கிரமித்து, தன்னிஷ்டப்படி நெறிப்படுத்தி, வழிப்படுத்தும் அடுத்த அத்துமீறலும் கொவிட் கட்டுப்பாட்டு நடவடிக்கையின் பேரில் அரங்கேறுகின்றது.

கொவிட் தொற்றுக் காலத்தில் நீதிமன்றங்கள் எப்படிச் செயற்பட வேண்டும் என்று 'பாடம் போதிப்பதற்காக' நாட்டின் நீதிபதிகளும், மாஜிஸ்திரேட்டுகளும் நீதிச் சேவை ஆணைக்குழுவினால் வரும் வெள்ளிக்கிழமை அழைக்கப்பட்டிருக்கின்றார்கள் என்று செய்தி வெளியாகியுள்ளது.

கொவிட் காலத்தில் இடம்பெறும் ஆர்ப்பாட்டங்கள், பொது எதிர்ப்பு நிகழ்வுகளுக்குத் தடை விதிக்க பொலிஸார் விண்ணப்பிக்கும் சமயங்களில் வெவ்வேறு நீதிமன்றங்கள் வெவ்வேறு உத்தரவுகளை வழங்குகின்றனவாம். அதை ஒரு வழிப்படுத்துவதற்கான வழிகாட்டலை வழங்கவே இந்த அழைப்பாம்.

அதாவது, எப்படி தீர்ப்புச் சொல்ல வேண்டும், உத்தரவு வழங்க வேண்டும் என்று நீதிச் சேவை ஆணைக்குழு மூலம் வகுப்பெடுத்து, வழிகாட்டி, அத்தகைய உத்தரவுகளைப் பெறப் போகின்றார்கள்.

அரசு சட்டத்தை நிறைவேற்றாமல், எழுந்தமானமாக அதிகாரத்தைப் பிரயோகித்தால் நீதிமன்றங்கள் வேறுபாடான உத்தரவுகளைத்தானே வழங்கும்?

இப்போது சட்டமில்லாத விடயத்தில் தீர்ப்புகள், உத்தரவுகளை எப்படி வழங்குவது என்று மேலிருந்து வழிகாட்டல்கள் திணிக்கப்படப்போகின்றன.

அதுவும் கூட கொவிட் பேரிடர் நெருக்கடி என்ற பெயரில்தான் – அந்த நெருக்கடி நியாயத்தின் பின்னால் நின்று கொண்டுதான் – முன்னெடுக்கப்படப் போகின்றது.

இது முற்றிலும் நீதித்துறையில் – அதன் சுதந்திரத்தில் –தலையீடு செய்யும் அராஜகம்.

பிரதம நீதியரசரைத் தலைவராகக் கொண்ட நீதிச் சேவை ஆணைக்குழுவா இதற்குத் துணை போகப் போகின்றது? உயர் நீதி மன்றமும், சட்டத்தரணிகள் சங்கமும் என்ன செய்யப் போகின்றன?

நீதித் துறைக்கு சாவுமணி அடிக்கப்படுவதாகவே தோன்றுகின்றது.

# இலங்கை விவகாரம் தொடர்பில் ஐ.நாவில் மிச்செல் பச்லெட் காட்டமாக பிரதிபலிப்பார்

## சுமந்திரன் நம்பிக்கை



இலங்கை விவகாரத்தில் ஐ.நா.மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் மிச்செல் பச்லெட், இம்முறை காட்டமாக பிரதிபலிப்பார் என நம்புகிறேன் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப்பேச்சாளரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 48 ஆவது கூட்டத்தொடர் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 13ஆம் திகதி நடைபெறவுள்ளது.

குறித்த தினத்தன்று ஐ.நா.மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் வாய்மூலமான அறிக்கையைச் சமர்ப்பிக்கவுள்ளமையுடன் இலங்கை விவகாரம் தொடர்பில் தனது அவதானிப்புகளை வெளிப்படுத்தவுள்ளார்.

இந்நிலையிலேயே குறித்த கூட்டம் தொடர்பாக கருத்து தெரிவிக்கும்போது எம்.ஏ.சுமந்திரன் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும் ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை முழுமையாக அமுல்படுத்துமாறு சர்வதேசத் தரப்பினர் மற்றும் நாமும் கோரிக்கைகளை முன்வைத்தோம். ஆனால் இலங்கை அரசாங்கம் எந்தவொரு நடவடிக்கையையும் இதுவரை முன்னெடுக்கவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆகவே ஐ.நா.மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் மிச்செல் பச்லெட், தங்களது அலுவலகத்தால் முன்னெடுக்கப்பட்ட சாட்சியங்கள் திரட்டல் உள்ளிட்ட செயற்பாடுகளை முன்னிலைப்படுத்தி காட்டமான பிரதிபலிப்பை நிச்சயம் செய்வார் என்ற நம்பிக்கை தங்களுக்கு இருக்கின்றது என எம்.ஏ.சுமந்திரன் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

# விடுதலைப் புலிகள் தொடர்பான புத்தகங்கள் வைத்திருந்த இருவர் இந்தியாவில் கைதாகினர்!

தடை செய்யப்பட்ட பயங்கரவாத அமைப்பான விடுதலைப் புலிகள் அமைப்பு தொடர்பான புத்தகங்கள் மற்றும் பல்வேறுப்பட்ட குற்ற ஆவணங்களை வைத்திருந்த சந்தேகநபர் இருவர் இந்தியாவில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்திய தேசிய புலனாய்வு பிரிவினர், சென்னை மற்றும் திருவள்ளூர் மற்றும் கேரளாவின் எர்ணாகுளம் ஆகிய ஏழு இடங்களில் திடீர் சோதனை நடவடிக்கையை தொடர்ச்சியான முன்னெடுத்து வந்தனர்.

குறிப்பாக ஈரான் மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளில் இருந்து இலங்கைக்கு ஆயுதங்கள், வெடிமருந்துகள், போதைப்பொருள்களை கடத்திய குற்றவாளிகள் மற்றும் சந்தேகநபர்களின் வளாகங்களிலேயே இந்திய தேசிய புலனாய்வுப் பிரிவினர் சோதனை நடவடிக்கையை முன்னெடுத்திருந்தனர்.

குறித்த சோதனை நடவடிக்கையின்போது இரண்டு சந்தேகநபர்கள் கடந்த 2021 ஒகஸ்ட் 2 ஆம் திகதி கைது செய்யப்பட்டனர். இவ்வாறு கைதுசெய்யப்பட்ட குறித்த சந்தேகநபர்களிடமிருந்து தடை செய்யப்பட்ட பயங்கரவாத அமைப்பான தமிழீழ விடுதலைப் புலிகள் தொடர்பான புத்தகங்கள், பல்வேறு குற்ற ஆவணங்கள், சிம் அட்டைகள் மற்றும் கையடக்கத் தொலைபேசிகள் உட்பட ஏழு டிஜிட்டல் சாதனங்களை புலனாய்வுப் பிரிவினர் பறிமுதல் செய்துள்ளனர் என இந்திய ஊடகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# 'பிளக் லொக்டவுன்' ஒன்றுக்கு செல்லுமாறு அரசை வலியுறுத்தும் வைத்திய நிபுணர்கள்

டெல்டா வைரஸ் தொற்று அச்சுறுத்தல் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றமையால் உடனடியாக 'பிளக் லொக்டவுன்' ஒன்றுக்கு செல்லுமாறு வைத்திய நிபுணர்கள் மற்றும் சுகாதாரத் தரப்பினர் அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளனர்.

குறித்த விடயம் தொடர்பான ஆவணங்களை வைத்திய நிபுணர்கள் மற்றும் சுகாதாரத் தரப்பினர், சுகாதார அமைச்சிடம் கையளித்துள்ளனர்.

டெல்டா வைரஸ் தொற்றின் தாக்கம் தொடர்பாகக் குறைத்து மதிப்பிட வேண்டாம். நாட்டில் அமுலிலுள்ள கட்டுப்பாடுகளும் போதுமானவையாக இல்லை. ஆகவே 'பிளக் லொக்டவுன்' ஒன்றுக்கு செல்வதே சிறந்தது என வைத்திய நிபுணர்கள் மற்றும் சுகாதாரத் தரப்பினர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அதாவது நாட்டை 3 வாரத்துக்கு முழுமையாக முடக்க வேண்டும். இல்லாவிடின் தொற்றைக் கட்டுப்படுத்த முடியாத நிலைமை ஏற்படலாம் என அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இதேவேளை கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழப்போரின் எண்ணிக்கையும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றமையால் அரசாங்கம் காலம் தாமதிக்காமல் உரிய நடவடிக்கைகளை விரைந்து மேற்கொள்ள வேண்டும் என வைத்திய நிபுணர்கள் மற்றும் சுகாதாரத் தரப்பினர் வலியுறுத்தியுள்ளனர்.

# பொதுமக்கள் மத்தியில் கொவிட் தீவிரப் பரவல்

## இப்படிக் கூறுகிறார் ஹேமந்த




பொதுமக்கள் மத்தியில் கொரோனா வைரஸ் வேகமாகப் பரவிவரும் தன்மை காணப்படுவதாக சுகாதார அமைச்சின் பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்தியர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

நோய் அறிகுறிகள் காணப்படுவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால், சிகிச்சை அளிக்கப்பட வேண்டிய நோயாளர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் உயிரிழந்தவர்களில் பெரும்பாலானோர் தடுப்பூசியை பெற்றுக்கொள்ளாதவர்களே என்றும் எனவே, பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கையைக் குறைக்க வேண்டுமாயின், அனைவரும் தடுப்பூசி ஏற்றிக்கொள்ள வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

# தமிழ் ஊடகத்துறையின் ஜாம்பவான் எஸ்.டி.எஸ்.!

**எஸ்.டி. சிவநாயகம் நினைவுப் பகிர்வு**

**அங்கம் - 46**

ந.வித்தியாதரன்



சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவி கிருஷாந்தி குமாரசுவாமிக்கு இழைக்கப்பட்ட கொடூரத்திற்கு எதிரான மக்கள் எழுச்சி, கிருஷாந்தியும், அவரது குடும்பத்தவர்களும் எதிர்கொண்ட அவலங்களுக்கு நீதியை மட்டும் தேடித் தரவில்லை, அதையும் தாண்டி பல நூற்றுக்கணக்கில் யாழ்ப்பாணத்தில் வல்வந்தமாகக் கடத்திக் காணாமலாக்கப்பட்ட தமிழ் இளைஞர்களுக்கு நேர்ந்த கதியையும் அம்பலப்படுத்தி நின்றது.

கிருஷாந்தி குமாரசாமி விடயத்தில் மக்கள் எழுச்சியால் ஓரளவு உண்மைகள் வெளிப்படுத்தப்பட்டு, குற்றமிழைத்தோர் அடையாளம் காணப்பட்டு, சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு, தண்டிக்கப்பட்டு, பொறுப்புக்கூறல் நிலைநாட்டப்படவும் வழிசெய்யப்பட்டது.

ஆனால் வடக்கில் அச்சமயம் கடத்தி காணாமலாக்கப்பட்ட பல நூற்றுக்கணக்கான இளைஞர்களின் விடயத்தில், கிருஷாந்தி விவகாரத்தினால் உண்மைகள் அம்பலப்படுத்தப்பட்டன என்றாலும், அது குறித்து முறையான சட்ட விசாரணைகள் நடக்கவில்லை, குற்றவாளிகள் அடையாளம் காணப்படவில்லை, சட்டத்தின் முன் நிறுத்தப்படவும் இல்லை, தண்டிக்கப்படவும் இல்லை, பொறுப்புக்கூறல் நிலைநாட்டப்படவும் இல்லை. இதுதான் துரதிர்ஷ்டமான நிலைமையாகும்.

பரந்த செம்மணி பெருவெளியில் அந்த இளைஞர்கள் குழிதோண்டி புதைக்கப்பட்டமை போல அந்தக் கொடூரங்கள் பற்றிய உண்மைகளும் அப்போது பௌத்த, சிங்களப் பேரினவாத அரசினால் தோண்டி புதைக்கப்பட்டு விட்டன.

இதுபற்றிய ஒரு சிறிய மேலோட்டம் இந்தக் கட்டுரைத் தொடருக்கு அவசியம். அப்போதுதான் இச்செய்தி பற்றிய எஸ்.டி.எஸ். ஐயாவின் பார்வையையும் விமர்சனத்தையும் நீங்கள் புரிந்துகொள்ள முடியும். அதனால் இவ்விடயத்தை ஒட்டி அப்போது வெளியான ஒரு சிறு குறிப்பை இங்கு தருகிறேன்.



**செம்மணியில் புதைகுழிப் பிரதேசம் ஒன்று**

கிருஷாந்தி வன்கொலை அச்சமயம் மூடுண்டிருந்த யாழ்ப்பாணத்திலும் யாழ்ப்பாணத்திற்கு வெளியிலும் பெரும் கிளர்ச்சியை ஏற்படுத்தியது. இதனால் இலங்கை நாடாளுமன்றத்தில் பெரும் வாதங்கள் எழுந்தன. இதனால் தொடர் யுத்தத்தில் ஈடுபட்ட இலங்கை அரசுக்கு பெரும் நெருக்கடி எழுந்தது. நெருக்கடியைத் தவிர்க்க சந்திரிகா அரசு எட்டு இராணுவத்தினரையும் ஒரு பொலிஸ் கான்ஸ்டபிளையும் கைது செய்தது. வழக்கு விசாரணை முடிவில் ஆறு இராணுவத்தினருக்கு மரண தண்டனையும் மற்றைய மூவருக்கு இருபதாண்டு சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டது.

ஆனால், அரசு எதிர்பாராத விதமாய் கிருஷாந்தி கொலை வழக்கு செம்மணிப் புதைகுழி வழக்காகியது. 1998ஆம் ஆண்டு ஜூலை 3ஆம் திகதி கிருஷாந்தி கொலை வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்ட இராணுவக் கோப்ரல் சோமரத்தின ராஜபக்ஷ கொழும்பு நீதிமன்றத்தில் வெளியிட்ட வாக்குமூலம் பெரும் கவனத்தை ஈர்த்தது.

*“செம்மணியில் கிருஷாந்தி, அவரது தம்பி பிரணவன், தாயார் இராசம்மா குமாரசாமி, அயலவர் சிதம்பரநாதன் மட்டுமல்ல, 300இல் இருந்து 400 வரை அப்பாவி மக்கள் புதைக்கப்பட்டுள்ளார்கள். நான் கிருஷாந்தியையோ மற்றவர்களையோ கொலை செய்யவில்லை.*

*“எனது மேலதிகாரிகள் கொன்றுவிட்டு கொண்டு வந்த சடலங்களை அவர்களின் கட்டளையின் பேரில் புதைப்பதுதான் எனது வேலை. என்னை செம்மணிக்கு கூட்டிச்சென்றால் அப்படிப் புதைக்கப்பட்ட தமிழர்களின் புதைகுழிகளை என்னால் அடையாளம் காட்ட முடியும்.”* - என்றார் அந்தக் கைதி.

செம்மணியில் குறைந்தபட்சம் 16 புதைகுழிகள் உள்ளன என்றும், அதில் பத்துப் புதைகுழிகளை தன்னால் அடையாளம் காட்ட முடியும் என்றும், ஐந்தை உதவிப் பொலிஸ் அதிகாரி பெரேராவால் காட்ட முடியும். எஞ்சிய ஒன்றை (அது ஒரு கோவில் அருகில் உள்ளது), டி.எம். ஜெயதிலக்காவால் (மரணதண்டனை பெற்ற இன்னொரு சிப்பாய்) அடையாளம் காட்ட முடியும் என்றும் ராஜபக்ஷ கூறினார்.

அத்துடன் இந்தப் படுகொலைகளுடன் தொடர்புடைய இராணுவ அதிகாரிகளின் பட்டியலையும் தர முடியும் என்று கோப்ரல் ராஜபக்ஷ கூறினார். கப்டன் லலித் ஹேவா, லெப்டினன்ட் விஜயசிறிவர்த்தன, லெப்டினன் துடுகல, மேஜர் வீரக்கொடி, மேஜர் குணசேகரா முதலிய இராணுவ அதிகாரிகளது விவரங்களையும் பகிரங்கப்படுத்தினார்.

அத்துடன் தனது வாக்குமூலத்தில் பல்வேறு கொலைகளை ராஜபக்ஷ விவரித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

அப்போதைய அரசு கிருஷாந்தி வழக்குடன் இந்த விவகாரத்தை மூடிமறைக்க முற்பட்டது. ஆனால் உலகளவில் இந்த விவகாரம் அவதானிக்கப்பட்டது. செம்மணிப் புதைகுழியைத் தோண்ட வேண்டும், உண்மையைக் கண்டறிய வேண்டும் என்று பல்வேறு மனித உரிமை அமைப்புக்கள் குரல் கொடுத்தன.

இதனையடுத்து இலங்கை அரசுக்கு புதைகுழி விவகாரத்தை தட்டிக்கழிக்க முடியாத நிலை ஏற்பட்டது.

கண்துடைப்புக்கு அவர் அடையாளம் காட்டிய முதலாவது இடத்தில் புதைகுழி தோண்டப்பட்டது.

அங்கு மனித சடல எச்சங்கள் மீட்கப்பட்டன. செம்மணியில் வெளிவந்த எலும்புக்கூடுகள் சோமரத்தின ராஜபக்ஷவின் நீதிமன்ற வாக்குமூலத்தை மெய்ப்பித்தது.



**புதைகுழியை அடையாளம் காட்டக் கூட்டி வரப்பட்ட சோமரத்ன ராஜபக்ஷ.**

செம்மணியில் மீட்கப்பட்ட எலும்புக்கூடுகளை கண்ணீருடன் திரண்ட தாய்மாரும் உறவுகளும் அடையாளம் காட்டினர். யாழ்ப்பாணமே கண்ணீர் கோலம் பூண்டது.

கிருஷாந்தி குமாரசுவாமி மற்றும் அவரது தாயார், தம்பியார், அயலவர் ஆகிய நால்வரின் சடலங்களும் செம்மணியில் தோண்டி எடுக்கப்பட்ட காலம் முதல் அந்த வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்ட கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷ கொழும்பு நீதிமன்றத்தில் தெரிவித்த தகவலுக்கு அமைய செம்மணியில் தோண்டப்பட்ட மனித புதைகுழி ஒன்றில் பத்துக்கும் மேற்பட்ட சடலங்கள் மீட்கப்பட்ட விடயம் வரை யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற அனைத்தையும் அருகிலிருந்து, நேரில் பிரசன்னமாகி, நான் செய்தி சேகரித்தேன். அதுமட்டுமல்லாமல், அது பற்றிய தகவல்களை பி.பி.ஸியின் தமிழோசை மூலம் உலகம் முழுவதற்கும் எடுத்துச் செல்ல நான் காரணமாக அமைந்தேன். அந்தக் காலகட்டத்தில் வடக்கிலிருந்து வெளியே வேறு பலமான ஊடக ஊடாட்ட வசதிகள் இல்லாத காரணத்தினால் பி.பி.ஸியின் அந்தச் சேவை முக்கியமாக இருந்தது. உதயன் நாளிதழில் அவை பற்றிய செய்திகளை நாங்கள் விவரமாக வெளியிட்டோமாயினும் குடாநாட்டுக்கு வெளியில் அவ்விடயங்களை சுடச்சுட, விரைவாக எடுத்துச் செல்வதில் பி.பி.ஸி. தமிழ்ச் சேவை முக்கிய பங்காற்றியது.

அந்தச் சேவையில் செம்மணி பற்றித் தொடராக வந்த என்னுடைய செய்திகளை சிவநாயகம் ஐயா மிக நுணுக்கமாகவும், மிக அவதானமாகவும் செவிமடுத்து வந்திருக்கிறார். அது அவரில் பிரதிபலிப்பை ஏற்படுத்தியது. அது பற்றிய விவரத்தை நாளை பார்ப்போம்.

(வளரும்.......)

# இடர்கால சுயகற்றல் மீட்டல் பயிற்சி - 2021

தரம் - 09 | விஞ்ஞானம் | அலகு 12

## உயிர்ப்பல்வகைமை

⁎ யாதேனும் ஒரு பிரதேசத்தில் வாழ்கின்ற அனைத்துக் குடித்தொகைகளையும் அவற்றுடன் இடைத்தாக்கம் புரியும் பௌதிகச் சூழலையும் கூட்டாகக் கருதும் போது அது சூழற்றொகுதி எனப்படும்.

1. சூழற்தொகுதிக்கு 4 உதாரணங்கள் தருக

.................................................................................................

.................................................................................................

2. சூழல்தொகுதிப்பல்வகைமை என்றால் என்ன?

.................................................................................................

.................................................................................................

3. இனப்பல்வகைமை என்றால் என்ன?

.................................................................................................

4. தற்கால மனிதனின் விஞ்ஞானப் பெயர் யாது?

.................................................................................................

5. அங்கி இனம் ஒன்றில் காணப்படும் வேறுபாடுகளுக்குக் காரணம் யாது?

.................................................................................................

6. பரம்பரையலகுப் பல்வகைமை என்றால் என்ன?

.................................................................................................

7. உயிர்ப்பல்வகைமை என்றால் என்ன?

.................................................................................................

### உயிர்ப்பல்வகைமையின் முக்கியத்துவம்

⁎ சூழலில் வாழ்கின்ற பெரிய, சிறிய அங்கிகள் அனைத்தும் அச்சூழலின் சம நிலையைப் பேணுவதில் முக்கிய பங்காற்றி வருகின்றன.

1. உயிர்ப்பல்வகைமையின் முக்கியத்துவங்கள் யாவை?

.................................................................................................

2. தாவர இனங்களுக்கு இடையே காணப்படும் போட்டிகள் எவை?

.................................................................................................

3. விலங்கினங்களுக்கிடையே காணப்படும் போட்டிகள் எவை?

.................................................................................................

4. தாவரங்கள் நீரை பெற்றுக் கொள்வதற்கான போட்டியை குறைத்துக் கொள்வதற்கு கொண்டுள்ள இசைவாக்கங்கள் (வேர்கள் அமைந்துள்ள முறை) எவை?

.................................................................................................

5. பறவையினங்களின் அலகுகள் பல்வேறு வடிவங்களில் காணப்படுகின்றமைக்கான காரணம் யாது?

.................................................................................................

6. விவசாயத் துறையில் வான்வகை இனங்களின் பரம்பரையலகுகள் பயன்படுத்துவதன் அனுகூலங்கள் யாவை?

.................................................................................................

7. சுதேச இனங்கள் எனப்படுபவை யாவை?

.................................................................................................

### உயிர்ப்பல்வகைமையின் மீதான அச்சுறுத்தல்

⁎ உயிர்ப்பல்வகைமைக்கு ஏற்படும் அச்சுறுத்தல் காரணமாக உயிர்ப்பல்வகைமை அருகிச் (குறைந்து) செல்லும் ஆபத்தை எதிர்நோக்கியுள்ளது.

⁎ இயற்கைக் காரணிகளாலும், மனித செயற்பாடுகளாலும் உயிர்ப்பல்வகைமைக்கு அச்சுறுத்தல் ஏற்படுகிறது.

1. பண்டைக் காலத்திலிருந்தே உயிர்ப்பல்வகைமை அழிவை எதிர்நோக்க காரணமாக இருந்த இயற்கைக் காரணிகள் எவை?

.................................................................................................

.................................................................................................

2. பின்வரும் விலங்கினங்கள் எவ் இயற்கைக் காரணிகளால் அழிந்தது?

டைனோசர் ......................     கம்பளி யானை..................................

3. உயிர்ப்பல்வகைமை அழிவை எதிர்நோக்க காரணமாக இருந்த மனித செயற்பாடுகள் எவை?

.................................................................................................

4. மனித குடித்தொகை அதிகரிப்பு காரணமாக ஏற்பட்டுள்ள சூழல் தொகுதி பிரச்சினைகள் எவை?

.................................................................................................

5. சூழல் மாசடைதல் என்றால் என்ன?

.................................................................................................

6. சூழல் தொகுதியில் பரம்பலடைவதால் உயிர்ப்பல்வகைமையில் பாரிய பாதிப்பை ஏற்படுத்திய வேற்றுப் பிரதேச ஆக்கிரமிப்பு உயிரினங்கள் 2 தருக

.................................................................................................

7. உச்ச உயிர்ப்பல்வகைமை வலயம் என்றால் என்ன?

.................................................................................................

8. உயிர்ப்பல்வகைமை செறிந்த நாடாக இலங்கை கருதப்படுவதற்கான காரணம் யாது?

.................................................................................................

### சூழற்றொகுதியின் முக்கிய இயல்புகள்

⁎ யாதேனும் ஒரு பிரதேசத்தில் வாழ்கின்ற அனைத்துக் குடித்தொகைகளையும் அவற்றுடன் இடைத்தாக்கம் புரியும் பௌதிகச் சூழலையும் கூட்டாகக் கருதும் போது அது சூழற்றொகுதி எனப்படும்.

⁎ குளம், உக்கலடையும் மரம், கற்பாறைகளைக் கொண்ட கடற்கரையோரம், புன்னிலம் என்பன சூழற்தொகுதியில் அடங்கும்

1. சூழற்தொகுதியின் இயல்புகள் 4 தருக

.................................................................................................

2. உயிர்க்கூறுகளிற்கிடையிலும் உயிரற்ற கூறுகளுக்கிடையிலும் நிகழும் 3 வித மான இடைத்தொடர்புகள் எவை?

.................................................................................................

3. உயிருள்ளவை - உயிருள்ளவை இடைத்தொடர்பு என்றால் என்ன?

.................................................................................................

4. உயிருள்ளவை - உயிருள்ளவை இடைத்தொடர்பானது எத்தேவைகளை நிவர்த்தி செய்வதற்காக நடைபெறுகின்றது?

.................................................................................................

5. உயிருள்ளவை - உயிருள்ளவை இடைத்தொடர்புகளுக்கு உதாரணங்கள் சில தருக.

.................................................................................................

6. சூழற்றொகுதி ஒன்றினுள் வாழ்கின்ற அங்கிகளுக்கும்இ உயிரற்ற கூறுகளுக்கும் இடையே நிலவும் இடைத்தாக்கம் எவ்வாறு அழைக்கப்படும்?

.................................................................................................

7. அங்கியொன்று வாழிடத்தில் இருந்து பெற்றுக்கொள்ளும் உயிரற்ற காரணிகள் எவை?

.................................................................................................

8. உயிருள்ளவை, உயிரற்றவை இடைத்தொடர்புக்கான சில உதாரணங்கள் தருக.

.................................................................................................

9. வறட்சியான சூழல் நிலைமைகளில் வாழும் தாவரங்கள் எவற்றை குறைப்பதற்கான இசைவாக்கங்களைக் கொண்டுள்ளன?

.................................................................................................

10. உயிரற்றவை - உயிரற்றவை இடைத்தொடர்பு என்பதால் கருதப்படுவது யாது?

.................................................................................................

11. உயிரற்றவை- உயிரற்றவை இடைத்தொடர்புகளுக்கு உதாரணங்கள் தருக


.................................................................................................

### இலங்கையின் சூழற்தொகுதிகள்

⁎ இலங்கை ஒரு தீவாக காணப்படுவதாலும் மத்தியில் மலைத்தொடர்கள் காணப்படுவதாலும் பல்வேறு சூழற்தொகுதிகளைக் கொண்டுள்ளது.

⁎ பல்வேறு சூழற்தொகுதிகள் உள்ளமை உயிர்ப்பல்வகைமை அதிகரிப்பிற்கு காரணமாகும்.

1. இலங்கையில் காணப்படும் சூழற்தொகுதிகள் தொடர்பான பருமபடியான படம் காட்டப்பட்டுள்ளது. இடைவெளிகளுக்குப் பொருத்தமான சொற்களை எழுதுக.




### இயற்கை நீர்ச் சூழற்தொகுதிகள்

⁎ இயற்கையான நீர்ச் சூழலை உவர்நீர், நன்னீர், சவர்நீர் என மூன்றாக வகைப்படுத்தலாம்.

⁎ பெருந்தொகையான அங்கிகள் நீர்ச் சூழலில் வாழ்கின்றன.

⁎ அங்கிகளின் உயிர்ப்பல்வகைமைக்கும் பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்தவையாகவும் நீர்ச் சூழற்தொகுதிகள் காணப்படுகின்றன.

**2. கீழே தரப்பட்டுள்ள சொற்களைப் பயன்படுத்தி இடைவெளிகளை பூரணப் படுத்துக**

(கடனீரேரி, சமுத்திரம், சவர்நீர், வண்டல் சமவெளி, ஈரநிலங்கள், பொங்குமுகம், ஆற்றங்கரைச் சூழலில், உயிர்ப்பல்வகைமை, காலநிலை மாற்றங்களை இழிவாக்கல், உள்நாட்டு நீர் நிலைகள், அங்கிக் குடித்தொகைகள்)

1. ஆறுகள் கடலுடன் கலக்கப்படும் இடம் ................................ எனப்படும்.
2. பொங்குமுகங்களில் ........................................ மிக அதிகமாகும்.
3. பொங்குமுகங்களில் நன்னீரும் உவர்நீரும் கலப்பதால் ........................... ........ உருவாகிறது.
4. ஆறுகள் கொண்டு வரும் மணல், வண்டல் என்பன படிவதால் பொங்குமுகத்தில் ............................. எனப்படும் முக்கோண வடிவிலான தீவுகள் தோன்றுகின்றன.
5. மண்மேடு / முருகைக் கற்பாறைகளால் முழுமையாகக் கடலில் இருந்து வேறாக்கப்பட்ட, வருடத்தில் குறிப்பிட்ட காலத்தில் மட்டும் கடலுடன் தொடர்புகொள்கின்ற சவர்நீர்த் தேக்கம் ................................... ஆகும்.
6. வண்டல் சமவெளி, மணல் சமவெளி, சேற்று நிலம் போன்ற சூழல்கள் ........ .................................... அடங்கும்.
7. ஆறுகள் மழைக் காலங்களில் பெருக்கெடுப்பதால் ............................. உருவாகிறது.
8. ஆறுகளினால் கொண்டு வரப்படும் உக்கல் படிவதால் ............................. வளம் ஆற்றங்கரைச் சூழலில் நிறைந்துள்ளது.
9. இயற்கையாக உருவாக்கப்பட்ட குளங்கள், ஏரிகள், மனிதனால் உருவாக்கப்பட்ட குளங்கள் என்பன ........................................ அடங்கும்.
10. புவிமேற்பரப்பின் பெரும் பகுதியை மூடிக் காணப்படும் உவர் நீருடனான பிரதேசம் ........................................ ஆகும்.
11. அல்கா, முருகையுரு அங்கிகள், சிப்பிகள், மீன்கள் போன்ற பாரிய ................. ............................. சமுத்திரங்களில் வாழ்கின்றன.
12. வருடத்தில் அதிக காலம் நீர் நிறைந்து காணப்படும் சேற்று நிலம்............................ ஆகும்.
13. வெள்ளப்பெருக்கைக் கட்டுப்படுத்தல், நிலத்தடி நீரைப் போசித்தல், நீர் நிலைகளின் எல்லைகளில் உறுதித் தன்மையைப் பேணல், ......................................... .......................................... உயிர்ப்பல்வகைமையைப் பேணல் போன்றவற்றில் ஈரநிலங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன.

(மிகுதி நாளை)

ஆக்கம் - செல்வி ஜெனுஷியா கில்பேட் குணம்
கட்டுறுப்பயில்வு மாணவ ஆசிரியை (யாழ்/ செங்குந்த இந்துக் கல்லூரி)
யாழ்/ தேசிய கல்வியியற் கல்லூரி.
வழிகாட்டலும் ஆலோசனையும் - திரு. ஞானமணி இரத்தினசிங்கம்
ஓய்வுநிலை விரிவுரையாளர், யாழ்/ தேசிய கல்வியியற் கல்லூரி.

# கர்ப்பிணிகள் கொவிட் தடுப்பூசி போடுகின்றமை பாதுகாப்பானது அது உயிரிழப்பைத் தவிர்ப்பதோடு நோய்த் தீவிரத்தையும் குறைக்கும்

## பெண்நோயியல் வைத்திய நிபுணர் சிறிதரன் ஆலோசனை

நாங்கள் தவறாக தடுப்பூசியை போட்டு விட்டோம் என்பதற்காக எந்த வகையிலும் கர்ப்பிணிகள் தமது கர்ப்பத்திற்கு தீங்கு செய்யக்கூடாதென மகப்பேற்று, பெண்ணியல் வைத்திய நிபுணர் அ.சிறிதரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாண மருத்துவ சங்கத்தினுடைய ஏற்பாட்டில் நடைபெற்ற கொரோனா தொடர்பான விழிப்புணர்வு ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இரண்டு மாதங்களுக்கு முன்பாக ஏழு கர்ப்பிணிப் பெண்கள் இறந்திருக்கின்றனர். இரண்டு மாதங்களுக்குள் இது மூன்று மடங்காக அதிகரித்திருக்கிறது. இதுவே இந்த கொரோனாத் தொற்று தாக்கத்தின் கடுமையை உணர்த்தும்.

கர்ப்பிணிப் பெண்களுக்கான தொற்று நோய்த் தாக்கம் என்பது மற்றவர்களை விட கூடுதலானது. உலக சுகாதார ஸ்தாபனம் அண்மையில் வெளியிட்ட அறிக்கையின் படி கர்ப்பிணித் தாய்மார்களுக்கு மிகக் கடுமையான நோய் வருதல், அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்படல், செயற்கை சுவாசம் அளிப்பது, மரண வீதம் என்பன மற்றவர்களுடன் ஒப்பிடும்போது அதிகமாக இருக்கின்றது.

தடுப்பூசிகளை கர்ப்பிணிப் பெண்களுக்கு போடுவது பாதுகாப்பானதே. இந்த தடுப்பூசி உயிரிழப்பையும் தீவிர தொற்று நிலைமையையும் தடுக்கும். தடுப்பூசிகளால் குறுகிய கால பாதிப்புகள் இதுவரை பதிவாகவில்லை. நீண்ட காலப் பாதிப்பு தொடர்பில் எதுவித சான்றும் இல்லை. அதனைப் பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

தடுப்பூசி போட்ட பின்னர் கர்ப்பிணிப் பெண்களுக்கு மற்றவர்களுக்கு ஏற்படுவது போல உடல் நோ ஏற்படலாம். அதற்கான வைத்திய ஆலோசனைகளை பெறமுடியும்.

தற்போதைய நிலையின் படி இலங்கையிலுள்ள சகல கர்ப்பிணிப் பெண்களும் இந்தத் தடுப்பூசியை




பெற்றுக்கொள்ளமுடியும். கர்ப்ப காலத்தில் எந்த மாதத்திலும் இந்தத் தடுப்பூசியை பெற்றுக்கொள்ளமுடியும் இலங்கையில் இதுவரைக்கும் சினோபோர்ம் தடுப்பூசியே கர்ப்பிணிப் பெண்களுக்கு வழங்கப்பட்டுள்ளது .

இனி கர்ப்பிணிப் பெண்களுக்கு பைசர், மொடர்னா, ஜோன்சன் அன் ஜான்சன் தடுப்பூசிகளும் வழங்கப்படலாம்.

கர்ப்பிணியாவதற்கு முதலோ அல்லது கர்ப்பிணியானதை தெரியாமலோ முதல் டோஸாக அஸ்ட்ரா ஜெனெகாவை எடுத்தவர்கள் இரண்டாவது டோஸாக அஸ்ட்ரா ஜெனெகாவையே எடுக்க முடியும்.

இரத்தம் உறைதலை ஏற்படுத்தலாம் என்கிற சந்தேகம் காரணமாக கர்ப்பிணிப் பெண்களுக்கு இனிமேல் முதலாவது டோஸாக அஸ்ட்ரா ஜெனெகா தடுப்பூசி வழங்கப்படாது.

பாலூட்டும் தாய்மார்களுக்கும் தடுப்பூசி வழங்க முடியும். தடுப்பூசி போட்டதற்காக பாலூட்டும் தாய்மார்கள் குழந்தைகளுக்கு பாலூட்டுவதை நிறுத்தத் தேவையில்லை. திருமணம் செய்ய இருப்பவர்கள் அனைவரும் தடுப்பூசியை பெற்றுக்கொள்ளமுடியும் . இதுவரை கிடைக்கப்பெற்ற தகவல் படி எந்த ஒரு தடுப்பூசியும் மலட்டுத்தன்மையை ஏற்படுத்துவதாக ஆதாரபூர்வமாக நிரூபிக்கப்படவில்லை.

இலங்கையில் கருத்தடை செய்வது தடை செய்யப்பட்ட ஒன்றாகும். நாங்கள் தவறாக தடுப்பூசியை போட்டு விட்டோம் என்பதற்காக எந்த வகையிலும் கர்ப்பத்துக்கு தீங்கு செய்யக்கூடாது.

கர்ப்பிணிப்பெண்கள் தடுப்பூசியைப் பெற்றாலும் ஏனையவர்களைப் போல சுகாதார நடைமுறைகளைத் தொடர்ந்தும் பின்பற்ற வேண்டும்.

கர்ப்ப காலங்களில் சத்தி எடுத்தல், உடம்பு நோ, கால் நோ, மூச்சுவிட சிரமம் போன்றவை உடலில் ஏற்படும் மாற்றங்களால் ஏற்படும் விடயங்கள்.

ஆனால் கொரோனா அறிகுறிகளையும் இதனையும் ஒன்றாக நினைத்து வைத்திய ஆலோசனையைப் பெறாமல் இருக்க சிலர் நினைக்கிறார்கள். ஆகவே, உங்களுக்கு ஏதாவது சந்தேகம் ஏற்படும் பட்சத்தில் நீங்கள் வைத்தியசாலை நாடுவது சிறந்தது.

கர்ப்ப காலத்தில் எடுக்கப்படும் உணவு முறைகள் தொடர்பாக தவறான கருத்துக்கள் இருக்கின்றன. உங்கள் உடலுக்கு ஒத்துக்கொள்ளும் சாப்பாடு எதையும் சாப்பிட முடியும். போதுமான அளவு தண்ணீர் பழங்களை உண்பது சிறப்பானது.

இயலுமான அளவு தற்போதைய காலத்தில் வைத்தியசாலைக்கு அதிகமானவர்கள் கர்ப்பிணிகளுடன் வருவதை தவிர்த்துக்கொள்வது நல்லது. அத்துடன் சிகிச்சைக்கு வரும் பொதுமக்கள் வைத்தியசாலைக்கு வரும் போது குழந்தை பிள்ளைகளை அழைத்து வருவதைத் தவிருங்கள். – என்றார்.

## மேலதிக நேரக் கொடுப்பனவுகளை அரச ஊழியர்களுக்கு நிறுத்த முடிவு

2022 ஆம் ஆண்டில் அரச ஊழியர்களுக்கான மேலதிக கொடுப்பனவை நிறுத்த தீர்மானித்துள்ளதாக நிதி அமைச்சு அறிவித்துள்ளதாக தென்னிலங்கை ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

2022 ஆம் ஆண்டு வரவு – செலவுத் திட்டத்தில் தற்போது அங்கீகரிக்கப்பட்ட கூடுதல் நேரக் கொடுப்பனவுகளைத் தவிர வேறு கொடுப்பனவுகளை மதிப்பீடு செய்ய வேண்டாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அரச ஊழியர்களுக்கு புதிதாக வேறு எந்த பிற கொடுப்பனவுகளையும் மதிப்பீடு செய்யக் கூடாது என அமைச்சுகளின் பிரதானிகள் மற்றும் திணைக்கள தலைவர்களுக்கு சுற்றறிக்கை மூலம் நிதி அமைச்சு ஆலோசனை வழங்கியுள்ளது.

எதிர்வரும் ஆண்டுக்கான ஊதியங்கள் மற்றும் கூடுதல் நேர ஊதியம் அனைத்தும் தனித்தனியாக காட்டப்பட வேண்டும்.

மேலும் 2021ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதலாம் திகதி குறிப்பிடப்பட்டுள்ள ஊழியர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் செலவின மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும்.

அத்துடன் எந்தவொரு முறையிலும் அரச சேவைக்கு புதிதாக ஊழியர்களை இணைத்துக் கொள்பவர்களுக்காக நிதி ஒதுக்கீடு செய்ய முடியாது என நிதியமைச்சின் சுற்றறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## கொவிட் வைரஸின் புதிய எபிசிலோன் திரிவு: ஒரு மணி நேரத்தில் 30 பேர் சாகும் அபாயம்

*கொவிட் வைரஸின் திரிவான எபிசிலோன் என பெயரிடப்பட்டுள்ள திரிவு நாட்டுக்குள் பரவினால், ஒவ்வொரு நிமிடமும் ஒருவர் இறப்பர் என அரச வைத்திய அதிகாரிகளின் ஒன்றியம் தெரிவித்துள்ளது.*

*இதனடிப்படையில் ஒரு மணி நேரத்தில் 30 பேர் இறக்கக் கூடும் எனவும் அந்தச் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.*

*இந்த புதிய வைரஸை எதிர்கொள்ள மக்களின் உடலில் இருக்கும் நோய் எதிர்ப்பு சக்தி மற்றும் தடுப்பூசி மூலம் வழங்கப்படும் நோய் எதிர்ப்பு சக்தியும் போதாது எனக் கண்டறியப்பட்டுள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் ஒன்றியத்தின் தலைவர் வைத்தியர் ருக்ஸான் பெல்லன தெரிவித்துள்ளார்.*

*தற்போது இந்த புதிய திரிவு இலங்கைக்குள் கண்டறியப்படவில்லை என்ற போதிலும் எதிர்காலத்தில் நாட்டுக்குள் பரவலாம் என்பதால் முன்னெச்சரிக்கையாக தேவையான தீர்மானங்களை எடுக்க வேண்டும் எனவும் அவர் கூறியுள்ளார்.*

*டெல்டா திரிவால் அழிந்த உயிர்களை விட எபிசிலோன் திரிவு மூலம் ஆயிரக்கணக்கான உயிர்கள் பலியாகும் எனவும் மருத்துவர் பெல்லன குறிப்பிட்டுள்ளார்.*

## தனிமைப்படுத்தல் சட்டம் மீறல்; 54,359 பேர் இதுவரை கைது

நாட்டில் கடந்த 24 மணித்தியாலங்களில் தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிய 108 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இதற்கமைய இதுவரை தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டோரின் எண்ணிக்கை 54 ஆயிரத்து 359 ஆக உயர்வடைந்துள்ளது எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் றோஹண தெரிவித்தார்.

இதேவேளை, மாகாணங்களைக் கடந்து பயணிப்பதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ள நிலையில் தடையுத்தரவை மீறி கடந்த சனிக்கிழமை மேல் மாகாணத்துக்குள் உட்பிரவேசிக்க முயன்ற 582 பேர் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டார்.

அதேபோன்று அதிவேகவீதிகளுக்குப் பிரவேசிக்கும் வாகனங்களும் விசேட சோதனைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றன எனவும் அவர் மேலும் கூறினார்.

## பண்டாரகமையில் 100 பேருக்கு தொற்று

பண்டாரகம பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் நேற்று 252 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட அன்டிஜன் பரிசோதனையில் 100 பேருக்குக் கொரோனாவைரஸ்தொற்றுஉறுதிப்படுத்தப்பட்டுள்ளது எனப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் தெரிவித்துள்ளனர்.

பொதுச் சுகாதாரப் பிரிவுக்கு உட்பட்டவர்களே அன்டிஜன் பரிசோதனைக்கு வந்திருந்தனர் எனவும், இவர்களில் 100 பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது எனவும் அவர்கள் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

இதையடுத்து தொற்றுக்குள்ளானவர்களும் அவர்களுடன் தொடர்பைப் பேணியவர்களும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

## பாதுகாப்புச் சின்னமாக மாற்றப்படும் தமிழரின் பழம்பெரும் பொக்கிஷங்கள்

காலி – உனவட்டுன பிள்ளையார் ஆலயத்தில் உள்ள 300 வருட பழைமை வாய்ந்த தேர் மற்றும் கோவில் ஆகியன பாதுகாப்பு சின்னங்களாக அறிவிக்கப்படவுள்ளன.

இது தொடர்பில் வர்த்தமானியில் அறிவிப்பது தொடர்பாக அரசாங்கம் கவனம் செலுத்தி வருகின்றது.

இது குறித்து ஆராய்ந்து பார்க்குமாறு தொல்பொருள் பணிப்பாளர் நாயகத்திற்கு இராஜாங்க அமைச்சர் விதுர விக்ரமநாயக்க ஆலோசனை வழங்கியுள்ளார்.

இராஜாங்க அமைச்சர் விதுர விக்ரமநாயக்க உள்ளிட்ட அமைச்சின் முக்கியஸ்தர்கள் இந்த ஆலயத்திற்குச் சென்று மேற்பார்வை செய்துள்ளனர்.

தென்னிந்திய சிற்பக்கலை நிபுணர்களால் இந்தத் தேர் சந்தன மரம் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ள நிலையில் 1983 ஆம் ஆண்டு இனக்கலவரத்தின் போது விஷமிகள் இந்த தேரை எரித்து நாசமாக்க முயற்சித்தனர். என்பது குறிப்பிடத்தக்கது.



- செல்லத்துரை ரவீந்திரன் -

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'இனப்படுகொலை', 'இனச்சுத்திகரிப்பு' ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

## அங்கம் - 101

**294. அங்கிருந்தபோது ஏதாவது அவதானிக்க கூடியதாக இருந்ததா?**

பாதுகாப்புகளுக்காக எங்களுக்கும் பலத்த கட்டுப்பாடுகள் இருந்தன. எங்கள் மீதும், ஹோட்டல் மீதும் தாக்குதல்கள் நடக்கலாம் என எதிர்பார்க்கிறோம் என்று அந்த கட்டுப்பாடுகளுக்கு காரணம் தந்தார்கள். 'நீங்கள் எல்லோருமே வெளிநாட்டினர், எங்களது பொறுப்பை ஏற்று வந்திருக்கிறீர்கள், ஆகவே அந்த பொறுப்புக்காகவே இவை ஏற்படுத்தப்பட்டவை' என்றும் மேலும் விளக்கங்கள் அதிகாரிகளினால் தரப்பட்டன. ஆதலால் எங்களால் ஹோட்டலை விட்டு வெளியே போகமுடியவில்லை. தொலைபேசி அழைப்புகளை - முக்கியமாக உள்ளூரிலிருந்து வருபவற்றை - எடுக்கவேண்டாம் என்றும், வெளிநாட்டு அழைப்புகளை நாங்கள் அறிந்தவர்களானால் சமயோசிதமாகக் கணக்கெடுத்து ஏற்றுக் கொள்ளவும் அறிவுரை இருந்தன.



உள்ளூர்ப் பத்திரிகைகள், தொலைக்காட்சி போன்றன போரின் முன்னேற்றங்களையே சொல்லிக் கொண்டிருந்தன. வெளிநாட்டு அழைப்புகளிலிருந்து, நோர்வே, அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகளின் ஏற்பாடுகளின் படி விடுதலைப் புலிகளை வெளியேற்றவும், மக்களை அப்புறப்படுத்தவும், கப்பல்கள், முல்லைத்தீவு கடற்கரையோரத்துக்கு வருவதற்கான ஏற்பாடுகள் நடக்கின்றன, காயப்பட்டுள்ள முக்கிய விடுதலைப் புலிகளின் தலைவர்களை மருத்துவப் பராமரிப்புக்குக் கொண்டு செல்ல அரசாங்கம் அனுமதித்துள்ளதால் அதற்கும் விமானம் ஏற்பாடு செய்கிறார்கள், ஆதலால் அவசரப்பட்டு எமது பேச்சுவார்த்தைகளில் இணக்கம் ஏதும் காட்டி, விடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டை சமரசம் செய்து விட வேண்டாம் என்று கேட்டுக் கொண்டார்கள். அது எங்களது எண்ணமல்ல என்று தொலைபேசி அழைப்புக்கள் தந்தவர்களுக்கு உறுதியளித்தோம்.

**295. உங்களது பரிந்துரைகளில் ஏதாவது ஏற்று நடைமுறைப்படுத்தப்பட்டதா?**





முழுமையான போர் நிறுத்தம் என்பது நடைபெறப் போவதில்லை என்பதை ஊடாட்டங்களின் மூலம் தெளிவாகத் தெரிந்து கொண்டோம். களத்தில் போர் நடத்துதல், அதன் முறைமை, தீவிரம், அதற்குரிய உத்திகள் யாவுமே கோட்டாபயவின் கையிலேயேயிருந்தன. அவர் தனக்கு நம்பிக்கையான தளபதிகளோடு அதனை நடத்திக்கொண்டிருந்தார். கோட்டாபயவின் அந்த முறைகளுக்கு அரச மட்டத்திலிருந்து ஏதும் கட்டுப்பாடுகளில்லை. புத்திமதி கூட அவர் ஏற்றால்தான்.

மஹிந்தவையும் ராஜபக்ஷ சகோதரர்களையும் பொறுத்தளவிலும் விடுதலைப் புலி வேட்டையை எவ்வளவு கெதியாக முடித்து விட முடியுமோ அதற்காக அவசரப்பட்டார்கள்.

அமெரிக்காவில் ஒபாமா பதவி ஏற்றதால், அவர் "பயங்கரவாதத்துக்கு எதிரான போர்" என புஷ் முன்னர் நடைமுறைப்படுத்திய கொள்கைகளில் மாற்றம் செய்து, விடுதலைப் போர்களை வித்தியாசமாக பார்க்க வேண்டும் என அறிவுறுத்தினார். அதைத் தொடர்ந்து அமெரிக்காவின் காரியதரிசி திருமதி கிளின்டன் அகப்பட்ட மக்களையொட்டி அக்கறை காட்டி அவர்களின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் அளிக்கப்படும் வரையில் போர் நிறுத்தம் ஏற்படுத்தப்பட வேண்டும் என்றும் அபிப்பிராயங்கள் தெரிவித்தார். மக்களை பற்றிய கரிசனையை இந்தியாவும் எடுத்து, மார்ச் 02ஆம் திகதி ஒரு போர் நிறுத்தத்தைக் கோரியிருந்தது. இவை எல்லாம் ஒன்று சேர்ந்து தாக்கங்கள் தந்து, தம்மைக் கட்டுப்படுத்தி விடாமல் இந்தியா வெளிப்படுத்திய அறிவிப்பை ஆறவைக்காது, பயங்கரவாதத்தை உடனடியாக அழித்துவிட, புலிவேட்டையை உன்மத்தமாக, பயங்கரவாத ஆயுதங்களையும் பாவித்து, இணை அழிப்புக்களைப் பற்றிக் கவலைப்படாது முன்னெடுத்து, வெற்றியிலேயே குறியாயிருந்தார்கள்.

இவற்றுக்கு முன்னேற்பாடாக அமெரிக்க தூதுவர் பிளேக் இணை அழிப்பு மட்டுப்படுத்தப்பட்டதாகவே அமையும் என்ற கருத்தே களத்தில் இருந்து வருகிறது என்றும், சிவசங்கர்மேனன், கனரக ஆயுதங்கள் பாவிக்கப்படமாட்டாது என மஹிந்த வாக்குறுதியளித்திருக்கிறார், ஆதலால் இணை அழிவு மட்டுப்படுத்தப்படும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டு அவை தமிழ் நாட்டுத் தலைவர்களுக்கும் ஊட்டப்பட்டன.



ஆகவே களநிலையை பாதிக்கக் கூடிய எமது எந்தப் பரிந்துரையும் கோட்டாபயவின் கைகளிலேயே தங்கியிருந்தன. எல்லா வழியாலும், முக்கியமாக பஸிலினதும் வெளியுறவு காரியதரிசி பாலித கோஹணவின் தொடர்ச்சியான நிர்ப்பந்தங்களாலும் போரை 24 மணித்தியாலத்துக்கு நிறுத்தி, அதை வலுவாக பத்திரிகைகள், வானொலிகள் மூலம் அறிவித்து, தவிர அது தொடர்பான துண்டுப்பிரசுரங்களை மக்கள் இருந்த பகுதிகளில் ஹெலிக்கொப்டர் மூலமாக வானத்தில் இருந்து வீசவும் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

வெளிநாட்டிலிருந்து வந்த தொலைபேசிகளின் அடிப்படையில் அகப்பட்டுள்ள மக்களின் தொகையையும், உணவு பற்றாக்குறைகளையும் தெரிவித்தபொழுது போர்ப் பகுதிகளில் இருக்கும் கட்டுப்பாடுகள், ஆபத்துக்களை கருதியே கப்பல்கள் அனுப்பப்படுகின்றன, அவற்றில் கொள்ளக்கூடியவை, ஏற்றி இறக்க ஐ.நா. அதிகாரிகள் காட்டும் தயக்கம், அதற்காக, இடை இடையிலான போர்நிறுத்தங்களை தளபதிகள் ஏற்றுக் கொள்ளாதமை, தாங்கள் கட்டுப்படுத்த முடியாத விடுதலைப் புலிகளின் தாக்குதல்கள் என்று பல காரணங்கள் சொல்லி அவை அனுப்பப்படும் என்று உறுதியளித்து, வெளியேறி முகாம்களில் உள்ளவர்கள் பராமரிக்கப்படுவதையும் சுட்டிக்காட்டினார்கள்.

பின்னர் பஸில் ராஜபக்ஷவுடன் நடந்த சந்திப்பில் இவை எழுப்பப்பட்டபோது, அவை விடுதலைப் புலிகள் தங்கள் பிரச்சாரத்துக்காக சொல்பவை என்று அவர் மறுத்தார். அதன் உண்மை, அந்த நேரத்தில் என்னவோ தெரியவில்லை. தாங்கள் முகாமில் வந்து சேர்பவர்களுக்கு கொடுக்குமாறு உணவு வகைகள், சலுகைகளை சுட்டிக்காட்டி மற்ற மக்களும் வெளியேறி வந்துவிட்டால், அப்படியான பற்றாக்குறை இருக்காது. அவர்களை வெளியேற்றத்தான் பார்க்கவேண்டும். ஆனால் தமிழரின் அரசியல்வாதிகளை பாருங்கள். அவர்களை (பாதிக்கப்பட்ட மக்களை) வைத்துக்கொண்டு அரசியல் செய்கிறார்கள், எங்களோடு இதுவரைக்கும் இந்த மக்களைப்பற்றி வந்து பேசவில்லை, உணவு, உடுபுடைவைகள் என அவர்கள் முன்னெடுத்துச் சேர்த்து அந்த மக்களுக்கு என்று முகாமிற்கு கொண்டு சென்று கொடுக்கவில்லை. ஆக, கூட்டணி அங்கத்தவர்களில் ஆனந்தசங்கரிதான் சில முகாம்களை பார்த்தார், எங்களோடு பேசினார். அப்பொழுது நீங்கள் கொடுக்கும் மாலை தேநீரோடு, இரண்டு மூன்று பிஸ்கட்டும், பெண்களின் பிரத்தியேக பாவிப்புக்கு சில குளியலறைப் பொருள்களும் தர வேண்டும் என அறிவுறுத்தினார் என அவரது முறையிலேயே சொன்னார்கள்.

(வளரும்.......)

# மெய்நிகர் வகுப்பறை

## Online Classroom 33

## StreamYard

**ஜனனி தேவானந்த்**
(முதுநிலை விரிவுரையாளர் -
(தகவல் தொழில்நுட்பம்),
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

அண்மையில் கொழும்பில் பிரபல்ய பாடசாலை நிகழ்வொன்று இணையவழி நேரலை நிகழ்ச்சியாக நடைபெற்றது. அதில் பல்கலைக்கழக மூத்த பேராசிரியர் ஒருவர் யாழ்ப்பாணத்திலிருந்தவாறு நேரலையாக கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றியிருந்தார். அந்த உரை மாணவர்களுக்கு புத்தெழுச்சியூட்டும் வகையில் அமைந்திருந்தது. சமூக ஊடகங்களிலும் நேரலையாக ஒளிபரப்பாகி பிரபல்யம் அடைந்திருந்தது. பேராசிரியரின் உரையின் சிறப்பிற்கு வலுச்சேர்ப்பதாக அந்த ஒளிபரப்பு முறைமை மற்றும் காட்சித் தெளிவு, துல்லியம் போன்றன அமைந்திருந்தன. நிகழ்வை நேரலையாக ஒளிபரப்பு செய்ய உதவிய தொழில்நுட்பம் பலரையும் ஆச்சரியத்தில் உள்ளாக்கியிருந்தது. அதனைப்பற்றி மெய்நிகர் வகுப்பறையில் குறிப்பிட வேண்டுமென்று பலர் கேட்டுக் கொண்டார்கள். அதனால் அந்த நேரலை ஒளிபரப்புக்கு உதவிய ஸ்ட்ரீம்யார்ட் (Stream Yard) செயலி பற்றி இங்கு அறிய முற்படுவோம்.

இன்று உயர்கல்வி நிறுவனங்களில் கல்விச் செயற்பாட்டிற்காக சூம் செயலி பயன்படுத்தப்படுவதால் அதுவே சிறந்த மெய்நிகர் தேர்வாக இலங்கையைப் பொறுத்தளவில் கல்விப்புலத்தில் நோக்கப்படுகின்றது. அதன் குறைநிறைகளோடு அதனை ஏற்றுக்கொண்டு வாழ்ந்து வருகின்றோம். தொழில்நுட்பங்களில் எது முதலில் அறிமுகமாகிறதோ அதனையே சிறந்ததாகக் கருதி அதனைப் போற்றிப் புகழ்ந்து வரும் ஒரு மன நிலை எம்மத்தியில் காணப்படுகின்றது. அது மனித குணமும்கூட எது முதலில் அறிமுகமாகிறதோ அது எங்களது என்று கருதும் மனநிலை உண்டு. பிடித்ததோ இல்லையோ அதன் குறைகளுடனேயே அதனைக் கட்டி அழுகின்ற நிலைமையைக் காணலாம். சூமைப் பொறுத்தவரை அந்த நிலைமையையே அவதானிக்க முடிகிறது.

இதனைத் தமிழர் மரபில் பேச்சுக்கால் கலியாணம் போல கட்டியதற்காக பிடிச்சுஹிதூ பிடிக்கவில்லையோ கட்டி அழுகிறது போல எனலாம். அதே வேளை புதிதாக ஒன்று அறிமுகமானால் அது வியப்பளிக்கும்.




இந்தப்பின்னணியில் தற்போது மெல்ல அறிமுகமாகிவரும் ஸ்ட்ரீம் யார்ட் என்றால் என்ன? அது எவ்வாறு சூம் செயலியிலிருந்து வேறுபடுகின்றன என்ற கேள்விகளுக்கு விடைகாண முற்படுவோம். இதில் எது சிறந்தது என்ற கேள்வியும் உண்டு. இவற்றிற்கிடையில் என்ன மாறுபாடுகள் காணப்படுகின்றன. என்பதையும் காணலாம். உண்மையில் இரண்டு தனித்தனி நிறுவனங்கள், தனித்துவமானவை எனலாம்.

**ஸ்ட்ரீம்யார்ட் (Stream Yard)**

ஸ்ட்ரீம்யார்ட் என்பது இணைய உலாவியில் ஒரு நேரடி ஸ்ட்ரீமிங் ஸ்டுடியோ ஆகும், அங்கு பயனர்கள் திரையைப் பகிரலாம், விருந்தினர்களை நேர்காணல் செய்யலாம், இணைக்கலாம் மற்றும் பேசலாம். அதே வேளை நீங்கள் நேரடியாக YouTube, Facebook, Linkedin, Twitch மற்றும் பிற தளங்களுக்கு ஸ்ட்ரீம் செய்யலாம். உண்மையில் இந்தப் பயன்பாட்டைப் பதிவிறக்காமல், நீங்கள் Chrome வலை உலாவி மூலம் ஸ்ட்ரீம் யார்டில் உள்நுழையலாம், ஏனெனில் இது உலாவி அடிப்படையிலான விடயங்கள், எனவே, உங்கள் மின்னஞ்சல் முகவரியுடன் பதிவு செய்யாது இதனை ஆரம்பிக்கலாம்.

ஒப்பீட்டளவில் நேரடி நேர்காணல்களுக்கு ஸ்ட்ரீம் யார்ட் சரியான கருவியாக இனங்காணமுடியும். ஒரே நேரத்தில் இணைப்பில் 10 பேர் வரை இருக்க முடியும். ஸ்ட்ரீம் யார்டைப் பற்றிய ஒரு அருமையான விடயம் என்னவென்றால், இது திரையில் கருத்துகளைக் காட்டுகிறது, அங்கு நீங்கள் அதைப் பற்றி பேசலாம், இது உங்கள் பார்வையாளர்களை சிறப்பாக உணர வைக்கிறது.

ஸ்ட்ரீம்யார்ட் என்பது புதிய ஒளிபரப்பு கருவியாகும், ஏனெனில் கூடுதல் ஒளிபரப்புக் கருவிகள் மற்றும் திறன்கள் ஸ்ட்ரீம் யார்ட் செய்தியை சரியான நபர்கள் பெறுவதற்கு மிக உயர்ந்த பயன்பாடாகும்.

ஆனால் சூம் செயலி கிளவுட் அடிப்படையிலானது. இங்கு ஓடியோ கான்பரன்சிங், மீட்டிங் ரெக்கார்டிங்ஸ், வெபினார்கள், வீடியோ கான்பரன்சிங் மீட்டிங் மற்றும் லைவ் அரட்டைக்கு பயன்படுத்தக்கூடிய பிரபலமான வீடியோ கான்பரன்சிங் தளங்களில் ஒன்றாகும். சூமை பொறுத்தமட்டில் பலரின் ஒரே நேரத்தில் சந்திப்பு சிக்கல் இல்லாது நடப்பதாகும். அதே வேளை நம்பகமானது மற்றும் பாதுகாப்பானது. இது டெஸ்க்டாப் மற்றும் சந்திப்பு அறை அமைப்புகளுக்கான டிஜிற்றல் ஓடியோ, வீடியோ மற்றும் திரை பகிர்வு ஆகியவற்றை வழங்குகிறது. சூம் செயலியைப் பொறுத்தளவில் அப்பிள் மேக், பி.சி. பயனர்கள் மற்றும் ஆண்ட்ராய்டு பயனர்களுக்கு பயன்பாடுகள் இருப்பதால் டெஸ்க்டாப் அல்லது மொபைல் பயன்பாட்டில் கூட்டங்களை நடத்தலாம் மற்றும் சேரலாம். இந்த வசதி ஸ்ட்ரீம் யார்டில் இல்லை. சூமில் பல திரைகளைப் பகிரலாம் மற்றும் அது மெய்நிகர் பின்னணி கை உயரும் அம்சத்தை அனுமதிக்கிறது. கோ – ஹோஸ்ட் அம்சம் கிடைக்கிறது. அதேவேளை ஹோஸ்டின் கடமைகளை வேறொருவருக்கு அனுப்ப அனுமதிக்கிறது, இதனால் அவர்கள் சந்திப்புகளை எடுக்க முடியும். ஒரு வேளை இணைப்பு




முற்றிலுமாக இறந்துவிட்டால், நீங்கள் ஒரு சந்திப்பிலிருந்து வெளியேற்றப்பட்டால், உங்கள் இணைப்பு மீண்டும் வரும்போது மீட்டிங்கை மறுதொடக்கம் செய்யாமல் நீங்கள் எளிதாக மீட்டிங்கில் சேரலாம்.

ஸ்ட்ரீம் யார்ட் மற்றும் சூம் செயலிகளுக்கிடையில் பல ஒற்றுமைகளும் காணப்படுகின்றன. அதாவது திரை பகிர்வு, சில வரம்புகளுடன் இலவச பதிப்பு கிடைக்கிறது. கமரா தேர்வுகளைப் பொறுத்தளவில் இணைப்பிலுள்ள சாதனம் அல்லது மென்பொருளில் உள்ள அனைத்து கமராக்களையும் தேர்வு செய்யும் வாய்ப்புள்ளது. இரண்டு செயலிகளிலும் அனைவரையும் முடக்குவதற்கான வசதிகள் உள்ளன. அது ஒரு சிறந்த வழி, ஏனென்றால் அது உங்களை மட்டுமே பேச அனுமதிக்கிறது. அதே போல இரண்டிலும் அதாவது சூமிற்குள் அல்லது ஸ்ட்ரீயார்டுக்குள் தனிப்பட்ட முறையில் அரட்டை அடிக்கலாம். இரண்டிலும் பதிவு செய்யப்பட்ட ஒளிப்பதிவிலிருந்து ஓடியோவை தனியாகப் பிரிக்கலாம். இரண்டிலிருந்தும் போட்காஸ்ட் (Podcast) பயன்படுத்தலாம். அனைத்து பிரச்சினைகளுக்கும் உதவ இரண்டு செயலிகளிலும் பெரும் ஆதரவுகள் உள்ளன.

இதேவேளை இந்த ஒளிபரப்பு சாதனங்களின் விலை விவரங்களும் இதன் பயன்பாட்டுத் தெரிவிற்கு மிகவும் உதவுகின்றது.

ஸ்ட்ரீம் யார்ட் இலவச மற்றும் கட்டண பதிப்பு இரண்டையும் கொண்டுள்ளது. இது இரண்டு கட்டண பதிப்புகளைக் கொண்டுள்ளது. அடிப்படை மற்றும் தொழில் வல்லுநர்களுக்காக சேவை கிடைக்கிறது. அடிப்படை சேவையைப் பெறுவதற்கு மாதத்திற்கு 20 டொலர் செலுத்த வேண்டும். தொழில் வல்லுநனர்களுக்கான மேம்பட்ட சேவைக்கு மாதத்திற்கு 39 டொலர் செலவாகும்.

சூமை பொறுத்தளவில் இலவச மற்றும் கட்டண பதிப்புகள் இரண்டும் உள்ளன. அதன் கட்டண பதிப்பில் சூம் பிசினஸ், சூம் ப்ரோ, ஜூம் பிசினஸ் மற்றும் சூம் எண்டர்பிரைஸ் ஆகியவை முறையே 19.99, 14.99 மற்றும் 19.99 டொலருக்கு கிடைக்கிறது.

அதாவது ஸ்ட்ரீம்யார்ட் முக்கிய அம்சங்களாக, நேரடி ஒளிபரப்பு, பதிவிறக்கத் தேவையில்லை, பல தளங்களுக்கு ஸ்ட்ரீம் செய்யும் வசதி, ட்விட்ச், யூடியூப் போன்ற பல தளங்களுக்கு கட்டண பதிப்புடன் அணுகும் வசதி. திரையில் கருத்துகள் கிடைக்கும் வசதி, பிராண்டிங்கைச் சேர்க்கும் வசதி பாதகமான விடயமாக 10 பேரை மட்டுமே அனுமதிக்க முடியும் என்பதாகும்.

அதேவேளை சூம் முக்கிய அம்சங்களாக, மொபையில் திரை பகிர்வு, பங்கேற்பாளர்களை 100 வரை அனுமதிக்க முடியும், நிரந்தர இணைப்பு, பிரேக்அவுட் அறைகள், இணை தொகுப்பாளர்களைச் சேர்க்கலாம் அவர்களுக்கு ஹோஸ்ட் கடமைகளை நிறைவேற்றும் வாய்ப்பு.

ஆகவே ஸ்ட்ரீம்யார்ட் சூம் உண்மையில் இரண்டு தனித்தனி நிறுவனங்கள் மற்றும் இரண்டு தனித்தனி விடயங்கள் உள்ளன. இவற்றிற்கிடையில் பல ஒற்றுமைகள் இருந்தாலும், அவை பல அம்சங்களில் வேறுபடுகின்றன.

# தொற்றாளரை வீட்டில் பராமரிக்கும் திட்டம் இரத்தினபுரியில் ஆரம்பம்!

கொழும்பு, ஒக. 15

இரண்டு முதல் 60 வயதிற்குட்பட்ட கொவிட் - 19 நோயாளிகளுக்கு மருத்துவர்களின் மேற்பார்வையின் கீழ் எந்த வித சிக்கலும் இல்லாமல் வீட்டிலேயே பராமரிக்கும் திட்டம் இரத்தினபுரி மாவட்டத்தில் ஆரம்பித்துவைக்கப்பட்டது.

மருத்துவ மேற்பார்வையின் கீழ் கொவிட் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கான வீட்டு பராமரிப்பு திட்டம் முதலில் மேற்கு மாகாணத்தில் ஆரம்பிக்கப்பட்டது. எதிர்காலத்தில் இந்தத் திட்டம் நாடளாவிய ரீதியில் நடைமுறைப்படுத்தப்படும் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

வீட்டு பராமரிப்பு கண்காணிப்பு திட்டத்துக்கு ஏறக்குறைய 1,000 மருத்துவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர் எனவும், நியமனத்துக்காகக் காத்திருக்கும் 426 மருத்துவர்களுக்கும் அதற்கேற்ப பயிற்சி அளிக்கப்பட்டுள்ளதாகவும் சுகாதார அமைச்சகம் அறிவித்துள்ளது.

கொவிட் நோயாளிகள், பகுதி சுகாதார மருத்துவ அலுவலருக்கு வழங்கப்பட்ட வழிகாட்டுதல்கள் மற்றும் அளவுகோல்களின்படி வீட்டிலேயே சிகிச்சைக்காகப் பதிவு செய்யப்படுகின்றனர்.

இந்த பதிவு செய்யப்பட்ட நோயாளிகளுக்காக 1390 என்ற 24 மணி நேர தொலைபேசி சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. வீட்டில் சிகிச்சை பெற வேண்டுமானால் நோய்த் தொற்றால் பாதிக்கப்பட்டவர் சம்மதம் தெரிவிக்க வேண்டும்.

எவ்வாறாயினும், அடிப்படை பிரச்சினைகள் மற்றும் கடுமையான சிக்கல்கள் உள்ள அனைத்து நோயாளிகளும் வழக்கம் போல் சிகிச்சை மையங்களுக்கு தொடர்ந்து பரிந்துரைக்கப்படுவார்கள் என்று அமைச்சகம் தெரிவித்துள்ளது.

# சுகாதாரக் கட்டுப்பாடுகளுடன் மன்னார் மடு மாதா திருவிழா



(ந.லோகதயாளன்)

மன்னார் மடு மாதா தேவாலயத்தின் வருடாந்த ஆவணித் திருவிழா திருப்பலி நேற்று காலை கூட்டுத் திருப் பலியாக ஒப்புக்கொடுக்கப்பட்டது.

திருவிழாதிருப்பலியை மன்னார்மறை மாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தலை மையில் சிலாபம்மறைமாவட்டஆயர்அருட்கலாநிதி வலன்ஸ் மென்டிஸ் ஆண்டகை மற்றும் ஆயர்கள் இணைந்து கூட்டுத் திருப் பலியாக ஒப்புக்கொடுத்தனர்.

மடு மாதாவின் வருடாந்த ஆவணி திருவிழா கடந்த 6 ஆம் திகதி கொடி யேற்றத்துடன் ஆரம்பமானது.

மடுத்திருத்தலத்தின் பரிபாலகர் அருட்தந்தை எஸ்.ஜே.பெப்பி சோசை அடிகளார் தலை மையில் கொடியேற்றம் செய்யப்பட்டது. தொடர்ந்து நவநாள் திருப்பலிகள் ஒப்புக் கொடுக்கப்பட்டன.

இதனைத் தொடர்ந்து நேற்றுமுன் தினம் மாலை வெஸ்பர் ஆராதனை இடம்பெற்று நற் கருணை ஆசீர்வாதம் வழுங்கப்பட்டது.

பின்னர் நேற்று காலை 6.15 மணிக்கு ஆயர்கள் இணைந்து திருவிழா திருப்பலியை கூட்டுத்திருப் பலியாக ஒப்புக்கொடுத்தனர்.

திருவிழா திருப்பலியைத் தொடர்ந்து திருச்சொரூப பவனி இடம்பெற்றதோடு, மடு அன்னையின் ஆசி வழுங்கப்பட்டது.

நாட்டில் கொரோனா தற்போது தீவிர மடைந்து வரும் நிலையில் மடு திருத் தலத்துக்கு ஏனைய மாவட்டங்களில் இருந்து வருகை தரும் பக்தர்களின் வருகை நிறுத்தப்பட்டுள்ளது.

கொரோனாத் தொற்று நிலையைக் கருத்தில்கொண்டு அரசின் சுகாதார வழி முறைகள் கட்டுப்பாடுகளுக்கு அமைவாக திருவிழா ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

# யாழ்ப்பாணத்தில் நேற்று காலை இந்திய சுதந்திர தின நிகழ்வுகள்



(இ.கலையமுதன்)

இந்தியாவின் 75 ஆவது சுதந்திர தினத்தையொட்டி யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத் தூதரகத்தில் சிறப்பு நிகழ்வுகள் நேற்று காலை நடைபெற்றன.

இதன்போது யாழ்ப்பாணத்துக்கான இந்தியத் துணைத்தூதுவர் ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கரன் இந்திய தேசியக் கொடியை ஏற்றினார். இந்நிகழ்வு நடைமுறையில் உள்ள சுகாதார வழிகாட்டுதல்களின்படி நடைபெற்றது.

இதேவேளை, பலாலியில் உள்ள இந்திய அமைதிப் படையினரின் நினைவிடத்தில் ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கரன் மலர்தூவி மரியாதை செய்தார். இதன்போது யாழ்.மாவட்ட கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் ஜெகத் கொடித்துவக்கும் இந்திய அமைதிப்படையினருக்கு அஞ்சலி செலுத்தினார்.

## திருத்தலங்களுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஆகியற்றுக்கு தலா பத்து இலட்சம் ரூபா பெறுமதியான காசோலைகளைப் பிரதமரிடமிருந்து பெற்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வழங்கி வைத்துள்ளார்.

இரண்டு ஆலயங்களுக்கும் நேற்றுக் காலை சென்ற அமைச்சர் இதற்கான காசோலைகளை வழங்கிவைத்தார்.

சுபீட்சத்தின் நோக்கு வேலைத்திட்டத்துக்கமைய பௌத்த சாசன மற்றும் மத விவகார அமைச்சர் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவால் மேற்குறித்த இரண்டு ஆலயங்களுக்கும் தலா பத்து இலட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டது.

பிரதமரால் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி உ தவியை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேற்று வழங்கி வைத்தார்.

## நேற்று 3, 435 பேருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கை 3 இலட்சத்து 54 ஆயிரத்து 968 ஆக அதிகரித்துள்ளது என அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 2 ஆயிரத்து 387 பேர் குணமடைந்து நேற்று வீடு திரும்பியுள்ளனர்.

இதையடுத்து நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 3 இலட்சத்து 9 ஆயிரத்து 732 ஆக உயர்வடைந்துள்ளது எனவும் அரச தகவல் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

## பாழடைந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

எனக் கருதப்படுகின்றது.

குறித்த சடலம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸார் ஊடாக நீதிவானின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது.

இந்தச் சடலம் தொடர்பில் தீவிர விசாரணைகளைக் கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# கோப்பாய் சந்தியில் கோர விபத்து; கணவர் கண்முன்னே மனைவி சாவு

(எஸ்.நிதர்ஷன், இ.கலையமுதன்)



யாழ்., கோப்பாய் சந்தியில் டிப்பர் வாகனம் மோதி இடம்பெற்ற விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இளம் குடும்பப் பெண் பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று முற்பகல் 10.45 மணியளவில் இடம்பெற்றது.

இளவாலை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தரின் மனைவியே இந்த விபத்தில் உயிரிழந்துள்ளார்.

கணவரும், மனைவியும் மோட்டார் சைக்கிளில் பயணித்த வேளை பின்னால் வந்த டிப்பர் வாகனம் மோதி விபத்து இடம்பெற்றது எனக் கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தில் பின்னிருக்கையில் அமர்ந்து சென்ற இளம் குடும்பப் பெண் வீதியில் வீழ்ந்து தலைப்பகுதியில் படுகாயமடைந்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கோப்பாய் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# உரும்பிராயில் வீடொன்றின் மீது பெற்றோல் குண்டுத் தாக்குதல்!

(எஸ்.நிதர்ஷன், இ.கலையமுதன்)

யாழ்., உரும்பிராய் பகுதியில் வீடொன்றின் மீது வன்முறைக் கும்பல் பெற்றோல் குண்டு வீசித் தாக்குதல் நடத்திவிட்டுத் தப்பிச் சென்றுள்ளது.

சம்பவத்தில் வீட்டின் முன் நிறுத்தப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் தீக்கிரை ஆக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

## ஆனையிறவில் வாகன விபத்து

# வீதியைவிட்டு விலகி குடைசாய்ந்தது டிப்பர்

கிளிநொச்சி, ஓகஸ்ட் 16

கிளிநொச்சி - ஆனையிறவு ஏ - 9 வீதி ஊடாக யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த கப் ரக வாகனத்தின் மீது கிளிநொச்சி நோக்கிச் சென்று கொண்டிருந்த டிப்பர் ரக வாகனம் மோதியதில் விபத்து ஏற்பட்டுள்ளது.


ஆனையிறவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் ஏ - 9 வீதியைக் கடந்து டிப்பர் ரக வாகனம் குடை சாய்ந்துள்ளது. இதில் பயணித்த சாரதி உள்ளிட்ட இருவர் சிறு காயங்களுக்குள்ளாகியுள்ளனர். விபத்து



தொடர்பான விசாரணைகளை பளைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# கட்டுகஹகல்கே வாவியிலிருந்து 3 மாணவர்களின் சடலங்கள் மீட்பு

## இம்முறை ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவிருந்தவர்கள்






மொனராகலை மாவட்டம், புத்தள கட்டுகஹகல்கே வாவி யிலிருந்து மூன்று மாணவர் களின் சடலங்கள் நேற்று மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இம்முறை ஜி.சீ.ஈ. உயர் தரப் பரீட்சைக்குத் தோற்றவி ருந்த மாணவர்களே நீரில் மூழ்கி உயிரிழந்த நிலையில் சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர்.

மூவரும் மொனராகலை மஹனாம தேசிய பாடசாலையில் கல்வி கற்று வந்தவர்களாவர்.

மொனராகலை பட்டுகம்மன பிரதேசத்தைச் சேர்ந்த ஆரம்.எம்.தனஞ்சயதோன் (வயது 18), மொனராகலை சிறிகல மற்றும் ரத்தனப்பிட்டிய ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த டி.பி.ரந்தீப தாரக்க (வயது 18), கோரள கமகே இமேஷ் (வயது 18) ஆகியோரே இவ்வாறு மரணமடைந்துள்ளனர்.

மூவரும் தமது நண்பர்களைப் பார்வையிடுவதற்காக சனி காலை வீடுகளிலிருந்து மோட்டார் சைக்கிளில் சென்றுள்ளனர் என்றும், மாலை வரை வீடு திரும்பாததன் காரணமாக பெற்றோர் அவர்களது தொலைபேசிக்கு அழைப்பை ஏற்படுத்தியுள்ளனர் என்றும் தெரியவருகின்றது.

தொலைபேசி அழைப்புகள் செயலிழந்துக் காணப்பட்டதால் குறித்த மாணவர்களில் ஒருவரின் பெற்றோர் பொலிஸ் நிலையத்துக்குச் சென்று முறைப்பாடு செய்துள்ளார்.

இந்நிலையில், புத்தள படல்கும்புர வீதி, கட்டுகஹகல்கே வாவிக்கு அருகில் இரண்டு மோட்டார் சைக்கிள்கள், தொலைபேசிகள் மற்றும் ஆண்கள் அணியும் ஆடைகள் காணப்படுகின்றன என்று மீனவர்கள் சிலர் புத்தள பொலிஸாருக்கு வழங்கிய தகவலுக்கு அமைவாக பொலிஸார் குறித்த இடத்துக்கு வந்து பிரதேச மக்களின் உதவியுடன் தேடிப் பார்த்தபோதே குறித்த மூவரும் நீரில் மூழ்கி உயிரிழந்தமை தெரியவந்துள்ளது.

குறித்த மூவரும் வாவியில் நீராடிக் கொண்டிருந்தமையை பிரதேச மக்கள் அவதானித்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மூவரின் சடலங்களும் பிரேத பரிசோதனைக்காக வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. இந்தச்சம்பவம்தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# சைக்கிள் திருடியவர்கள் இருவர் யாழில் சிக்கினர்

யாழில் சைக்கிள் திருட்டில் ஈடுபட்டுவந்த இருவர் யாழ்.மாவட்ட குற்றத் தடுப்புப்பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளமையுடன் திருடப்பட்ட சைக்கிள்களும் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

யாழ்.இந்துக் கல்லூரி, முனியஸ்வரன் ஆலயம், யாழ்.நகரப்பகுதி, கொக்குவில் போன்ற பிரதேசங்களில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த சைக்கிள்கள் மேற்படி நபர்களால் கடந்த சில நாள்களாகத் திருடப்பட்டுவந்திருந்தன.

மேற்படி நபர் தொடர்பில் யாழ்.மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவினருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் யாழ்.சாவக்கட்டு பகுதியைச் சேர்ந்த 19, 20 வயதுடைய இருவர் சாவக்கட்டு பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட நபர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் திருடப்பட்ட 5 சைக்கிள்கள் பொலிஸாரால் மீட்கப்பட்டன. எனினும் இது தொடர்பில் முறைப்பாடுகள் கிடைக்கப்பெறாதமையால் மேற்படி பகுதிகளில் சைக்கிள்களை தவறவிட்டவர்கள் யாழ் மாவட்ட குற்றத்தடுப்புபிரிவு பொலிஸாரைத் தொடர்பு கொள்ளுமாறு பொலிஸார் அறிவுறுத்தல் வழங்கியுள்ளனர்.

# போலி நாணயத்தாள்களுடன் இரண்டு சந்தேகநபர்கள் கைது

கிராண்ட்பாஸ், வெல்லம்பிட்டி மற்றும் ஒருகொடவத்த ஆகிய பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்ட விசேட சோதனை நடவடிக்கையின்போது போலிநாணயத்தாள்களுடன் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் றோஹண தெரிவித்தார். இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு -

போலி நாணயத்தாள்களை அச்சிட்டமை மற்றும் அதனைப் பரிமாற்றம் செய்த குற்றச்சாட்டுகளின் கீழ் குறித்த இருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது 100 ரூபா பெறுமதியான 25 போலி நாணயத்தாள்களையும், 500 ரூபா பெறுமதியான 18 நாணயத்தாள்களையும், 1,000 ரூபா பெறுமதியான ஒரு நாணயத்தாளையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

அதேவேளை, போலி நாணயத் தாள்கள் அச்சிடப் பயன்படுத்தப்பட்ட மடிக்கணிணி ஒன்றையும் ஏனைய பல பொருள்களையும் பொலிஸார் இதன்போது கைப்பற்றியுள்ளனர்.

சந்தேகநபர்கள் விசாரணைகளின் பின்னர் கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர். இது தொடர்பில் கிராண்ட்பாஸ் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் எனக் குறிப்பிட்டுள்ளார்.

# பொலிஸார் எனத் தன்னைக் கூறி பணம், நகை யாழில் கொள்ளை

## வசமாக மாட்டினார் நபர் ஒருவர்

யாழ்ப்பாணம், ஒக. 16

தன்னை பொலிஸ் எனக் கூறி தந்திரமான முறையில் நகை மற்றும் பணங்களை கொள்ளையடித்த நபரை யாழ் பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பிரிவினர் கைது செய்தனர்.

யாழ் நகரப்பகுதி, நாவற்குழி, அரியாலை, மானிப்பாய் போன்ற இடங்களில் தனிமையில் நடமாடும் வயோதிபர்கள் பெண்களைக் குறிவைத்து அவர்களிடம் சென்று தன்னை பொலிஸ் என அறிமுகப்படுத்தி பேச்சு கொடுத்து அவர்களுடன் பேச்சு நடத்தி அவர்கள் அசரும் நேரம் பார்த்து அவர்கள் உடமையில் இருக்கும் நகை, பணம், தொலைபேசி என்பனவற்றைக் கொள்ளையடித்து சென்றுள்ளார்.

குறித்த நபர் கடந்த 2 வாரங்களில் 6 இடங்களில் கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டுவந்துள்ளார். இது தொடர்பில் யாழ் பொலிஸ் நிலைய குற்றத் தடுப்புப் பிரிவில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது. இது தொடர்பில் விசாரணைகளை குற்றத் தடுப்புப் பிரிவு பொலிஸார் மேற்கொண்டனர். யாழ். பொலிஸ்நிலையப் புலனாய்வு பிரிவினருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் யாழ். நாவற்குழி பகுதியைச் சேர்ந்த 30 வயதுடைய நபர் யாழ் குற்றத்தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட நபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் 2 தங்கச் சங்கிலி 17 ஆயிரம் ரூபா பணம் உட்பட மூன்றரை லட்சம் ரூபா பெறுமதியான கொள்ளைப் பொருள்களும் பொலிஸாரால் மீட்கப்பட்டன.

இதேவேளை, மேற்படி கொள்ளைச் சம்பவங்களுக்குப் பயன்படுத்தப்பட்ட மோட்டார் சைக்கிளும் பொலிஸாரால் மீட்கப்பட்டதுடன் கொள்ளையிடப்பட்ட பொருள்களை விற்பனையில் ஈடுபட்ட சந்தேகநபரினது மனைவியும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். குறித்த கைது நடவடிக்கை யாழ். குற்றத் தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி நெவின் பிரியந்த தலைமையில் பொலிஸ் உத்தியோகத்தர்களான விஜயகாந்த் வாகிசன் போன்ற குழுவினரால் மேற்கொள்ளப்பட்டன.

04



வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூர் கந்தசாமி கோவில் வருடாந்த உற்சவத்தையொட்டி 'காலைக்கதிர்' நடாத்தும்

# மாபெரும் சைவ சமய அறிவுப் போட்டி - 2021

## போட்டி விதிகள்

1. இந்தப் போட்டியில் ஆர்வமுடைய அனைவரும் பங்குபற்ற முடியும்.
2. 13.08.2021 முதல் எதிர்வரும் 06.09.2021 வரை காலைக்கதிரில் தினமும் வெளியாகும் கேள்விகளுக்குச் சரியான விடைகளை இதே தாளில் எழுதி, கூப்பனிலுள்ள விவரங்களை நிரப்பி அனுப்புவதன் மூலம் போட்டியினுள் நுழையலாம்.
3. சரியான விடைகளை எழுதி அனுப்புவர்களில் இருந்து தினமும் குலுக்கல் முறை மூலம் அந்த நாளுக்குரிய வெற்றியாளர் தெரிவு செய்யப்படுவார். அத்துடன் முழு நாள்களிலும் சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படும் முதல் மூன்று பேருக்கும் பணப் பரிசில்கள் உண்டு

## பரிசு விவரம் :

**முழுப் போட்டிக்குமான முதலாம் இடம் - ரூபா 7,000.00**
**இரண்டாம் இடம் - ரூபா 5,000.00**
**மூன்றாம் இடம் - ரூபா 3,000.00**
**தினசரி வெற்றியாளர்கள் ஒவ்வொருவருக்கும் தலா - ரூபா 1,000.00**

4. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் அனுப்பலாம்.
5. பரிசுக்குரியவர்கள் எதிர்வரும் 12.09.2021 அன்று காலைக்கதிர் பத்திரிகை மூலம் அறிவிக்கப்படுவார்கள்.
6. நடுவர்களின் தீர்ப்பே இறுதியானதாகும்.

**1. நல்லூர்த் தேரடியில் தவத்திரு சிவயோகசுவாமிகள் கண்ட அவரது குருநாதர் யார்?**

................................................................

**2. சிவ சின்னங்கள் எனப்படுபவை எவை?**

................................................................

**3. இனைவனின் ஐந்தொழில்களும் எவை?**

................................................................

**4. அவற்றில் தேர்த்திருவிழாவைக் குறிப்பது எது?**

................................................................

**5. நல்லூர் ஆலயத்தின் தீர்த்தக் கேணி எத்தனையாம் ஆண்டு கட்டப்பட்டது?**

................................................................

**சரியான பதில்கள், கூப்பன்களுடன் இணைக்கப்பட்டு தபால் மூலமாகவோ, நேரடியாகவோ கிடைக்கக் கூடியவாறு எதிர்வரும் 01.09.2021 இற்கு முன்னர் பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.**

**காலைக்கதிர் - பசுமை ஊடக இல்லம்**
**30, கல்லூரி வீதி,**
**யாழ்ப்பாணம்**

04

பங்குபற்றுபவர்களின் விவரங்கள்:-

1. முழுப் பெயர் : --------------------------------------------
2. பிறந்த திகதி : --------------------------------------------
3. கல்வி கற்கும் தரம் : --------------------------------------
4. பாடசாலை : --------------------------------------------
5. முகவரி : --------------------------------------------

..........................................
கையொப்பம்

காலைக்கதிர் Kalaikkathir

# தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக சர்வதேசம் சென்றார் இராயப்பு ஆண்டகை!

## கர்தினாலுக்கு தேரர் பதிலடி



பேராயர் கர்தினால் அவர்கள், உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக அடிக்கடி முரண்பாடான விடயங்களை தெரிவித்து வருகின்றார் என சிங்கள ராவய அமைப்பின் பொதுச் செயலாளர் மாகல்கந்த சுதந்த தேரர் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் குறிப்பிடுகையில

'கர்தினால் அவர்களே, நீங்கள் நேற்று பாரதூரமான கருத்தொன்றை தெரிவித்தீர்கள். இந்த வழக்கை சர்வதேசத்துக்குக் கொண்டு செல்வோம், அதே போல் பாப்பரசருக்கு தெரிவிப்போம் என்று சொன்னீர்கள். கர்தினால் அவர்களே நாங்கள் ஞாபகப்படுத்த விரும்புகின்றோம், நம் நாட்டில் 30 வருட கால யுத்தமொன்று இருந்தது.

மன்னார் மாவட்டத்தின் ஆயர் இராயப்பு ஜோசப் உட்பட குழுவினர் விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு ஆதரவாக தொடர்ந்தும் செயற்பட்ட வேளையில் இந்த கத்தோலிக்க சபை எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கவில்லை. இராயப்பு ஜோசப் புலிகள் இயக்கத்துக்கு சார்பாக பேச ஜெனிவா வரை சென்றார்.

இராயப்பு ஜோசப் ஆண்டகை புலிகள் இயக்கத்தைப் பாதுகாத்தார். புலிகள் இயக்கம் தலதாமாளிகைக்கு குண்டு தாக்குதல் நடத்திய போது இந்த நாட்டின் மஹா நாயக்க தேரர்களோ, இந்நாட்டின் பிக்குமார் அமைப்புக்களோ சர்வதேசத்துக்குச் செல்லவில்லை.

இந்த வழக்குகளை சொல்ல ஜெனிவாவிற்கு செல்லவில்லை. இந்த நாட்டில் உள்ள உள்நாட்டுப் பிரச்சினைகளை உள்நாட்டிலேயே தீர்க்க வேண்டும் என்ற நோக்கத்தில் இருந்து எப்படியாவது 30 வருட கால யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வர முடிந்தது.

அரந்தளவாயில் தேரர்களை வெட்டி குத்தி படுகொலை செய்யும் போது இந்த நாட்டின் மஹா நாயக்க சங்கமோ மஹா நாயக்க தேரர்களோ கோள் சொல்வதற்காக சர்வதேசத்திற்கு செல்லவில்லை.

இந்த நாட்டில் விகாரைகளுக்குக் குண்டுத் தாக்குதல் நடத்திய பொழுது கிராமங்களில் வாழ்ந்த அப்பாவி மக்களைக் கழுத்தறுத்து கொலைசெய்யும்போது இங்கு எந்த மஹா நாயக்க தேரர்களும், சிவில் அமைப்புக்களும் கோள் சொல்வதற்காக சர்வதேசத்துக்குச் செல்லவில்லை.

அதனால் கர்தினால் அவர்களே நாட்டுக்கு எதிராக கோள் பேசாதீர்கள். இந்தப் பிரச்சினையை வெளிப்படையாகப் பாருங்கள். நாங்கள் அனைவரும் இணைந்து இனி வரும் காலங்களில் இப்படியான சம்பவங்கள் இடம்பெறாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

நாங்கள் கர்தினால் அவர்களுக்கு சொல்கின்றோம் நம் நாட்டில் இனிமேல் இப்படியான விடயங்கள் இடம்பெறாமல் பார்த்துக்கொள்வோம், என குறிப்பிட்டுள்ளார்.

# றாகமை வைத்தியசாலையில் காணாமல் போன சடலம்!

## விசாரணைகள் தீவிரம்

றாகமை வைத்தியசாலையில் உயிரிழந்த வயோதிபப் பெண்ணொருவருடைய சடலம் காணாமல் போயுள்ள நிலையில், அது தொடர்பாக வைத்தியசாலை நிர்வாகத்தினர் தீவிர விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வத்தளை ஹீனுபிட்டி பகுதியைச் சேர்ந்த 71 வயதான அழகேசன் சிவகாமி என்ற பெண்ணின் சடலமே இவ்வாறு காணாமல் போயுள்ளதாகத் தெரிவிக்கப்படடுள்ளது.

கொழும்பு சிங்கள ஊடகம் ஒன்று வெளியிட்டுள்ள செய்தியில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த செய்தியில் தொடர்ந்தும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு -

மேற்படி பெண் றாகமை வைத்தியசாலையின் 30 ஆவதுவிடுதியில்கடந்த12ஆம் திகதி சேர்க்கப்பட்டிருந்தார்.

பெண்ணைப் பார்ப்பதற்காக 13 ஆம் திகதி அவரது மகன் வைத்தியசாலைக்கு சென்ற வேளையில், அவர் உயிரிழந்துள்ளார் என வைத்தியசாலை அதிகாரிகளால் அறிவிக்கப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து, சடலத்தை பொறுப்பேற்பதற்காக அவரது மகன் சென்ற வேளையில், அவரிடம் பெண்ணொருவரின் சடலம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

எனினும், குறித்த சடலம் தன்னுடையதாயினுடையது அல்லவென கூறிய மகன், அந்த சடலத்தை பொறுப்பேற்க மறுத்துள்ளார்.

அதனைத் தொடர்ந்து, றாகமை வைத்தியசாலையில் உயிரிழந்த நிலையில், உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்ட சடலங்கள் தொடர்பில் ஆராய்ந்த போதிலும், குறித்த பெண்ணின் சடலத்தை கண்டுபிடிக்க முடியவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

சடலம் இதுவரை கண்டுபிடிக்கப்படாத நிலையில், வைத்தியசாலை நிர்வாகத்தினர் விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.






# முல்லைத்தீவு மாவட்டத்தில் திருவிழாக்கள் நடத்தத் தடை

முல்லைத்தீவு மாவட்டத்தின் மல்லாவி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினர் பிரதேச மக்களுக்கான கொவிட் சுகாதார நடைமுறைகளை அமுல்படுத்தல் தொடர்பான அறிவித்தலை விடுத்துள்ளனர்.

மல்லாவி, மாந்தை கிழக்கு பிரதேசங்களில் கொவிட் நோயாளர்களின் தாக்கம் வேகமாக அதிகரித்து வருகின்றமையால் பல இந்து ஆலயங்களில் இருந்து விசேட திருவிழாக்கள் மற்றும் பொங்கல் நிகழ்வுகளை நடத்துவதற்கு அனுமதி கோரப்படுவதாலும் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் அறிவுறுத்தலுக்கு அமைய சில முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன என மல்லாவி மற்றும் மாந்தை கிழக்கு சுகாதார வைத்திய அதிகாரி க.சுசீந்திரன் அறிவித்துள்ளார்.

பிரதேசத்திற்கு உட்பட்ட சகல வழிபாட்டு தலங்களிலும் வழமையான ஆராதனைகளை பத்து அல்லது அதற்கு குறைந்தோரின் பங்குபற்றுதலுடன் நடத்த முடியும் என்றும், விசேட ஆராதனைகள், பொங்கல் நிகழ்வுகள் மற்றும் திருவிழாக்கள் என்பவற்றை தற்கால கொவிட் நிலைமையைத் தடுக்கும் முகமாக நிறுத்த வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எந்த ஒரு வழிபாட்டு தலங்களிலும் ஒரே நேரத்தில் பத்துக்கும் மேற்பட்டவர்கள் வழிபாட்டில் ஈடுபடல் அல்லது வழிபாட்டு தலங்களில் கொவிட் 19 சுகாதார நடைமுறைகளை பின்பற்றத் தவறுதல் போன்றவற்றுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கிராம சேவகர் ஊடாக இந்த அறிவிப்பு வழிபாட்டு தலங்களுக்கு விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஓட்டமாவடி சூடுபத்தினசேனையில் 1,642 கொவிட் சடலங்கள் அடக்கம்

மட்டக்களப்பு - ஓட்டமாவடி, சூடுபத்தினசேனையில் இதுவரை 1642 கொவிட் சடலங்கள் அடக்கம் செய்யப்பட்டுள்ளன என மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் நா.மயூரன் தெரிவித்துள்ளார்.

குறித்த பிரதேசத்தில் இடப்பற்றாக்குறை காணப்படுவதாகவும், சடலங்களை அடக்கம் செய்வதற்காக வேறு ஓர் இடம் ஏற்பாடு செய்யப்பட்டு வருவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

4 ஆவது அலையானா டெல்டா திரிவு இலங்கை பூராகவும் அதிகரித்துள்ள நிலையில், மரண வீதமும் அதிகரித்து வருகிறது.

ஆகவே மக்கள் அவதானமாக சுகாதார வழிமுறைகளை பேண வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

# இந்தியாவிலிருந்து ஒட்சிசனை கொள்வனவு செய்ய அரசு முடிவு

கொவிட் சிகிச்சைகளுக்காக, ஒவ்வொரு வாரமும் 100 மெற்றிக் தொன் ஒட்சிசனை இந்தியாவிலிருந்து கொள்முதல் செய்ய அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

இந்த நடவடிக்கை அடுத்த வாரத்திலிருந்து ஆரம்பிக்கும் என்று சுகாதார அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் கொவிட் தொற்றாளர்களின் எண்ணிக்கையும், இறப்பு எண்ணிக்கையும் அதிகரித்து வரும் நிலையில் ஒட்சிசனுக்கு பற்றாக்குறை நிலவுவதை அடுத்தே இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 16.08.2021 இல் வெளியிடப்பெற்றது.